[illegible]

V2. NO. 17 25 April 1929

ML
[illegible]211, N28KA
M29.2.17
189052

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஷ ஏப்ரல் மீ 25உ [No. 17.

OFFICE OF THE REGIS... 1927 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 321
2. ஏமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B.A., B.L. 323
3. மாறன் பாப் பாவினம் K. (நாராயணசாமி ரெட்டிகாரு அனுப்பிய பிரதி) 324
4. சிலப்பதிகாரமும் மணிமேகலையும். A. ஸ்ரீநிவாஸராகவன் B.A. (Hons) 326
5. வில்லி பாரத விளக்கம் T. S. நடராஜ பிள்ளை B.A., B.L. 327
6. அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 330
7. மதிப்புரை. 331
8. கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L. 333
9 தமிழ்ப் பாடம் 335
10 வர்த்தமானம் 339

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்

வள்ளுவர் வாய்மை.

IV

189052

எத்தகைய வோரையி லப்பொல்லாத சூத்திரத்தாற் பவணந்திமுனிவர் தம் நன்னூலை முடித்தனரோ அறியோம். அவ்வோரைதான் நல்லதா யிருக்குமாயின் எந்நூலில் வந்துளதென்பதேனும் தெரிதற்கு வகையற்றார் வாய்க்கெல்லாம் அச்சூத்திரம் இன்று இரையாகி நிற்க நேர்ந்திடாது. பின்னாள் அதற்கு இக்கதி வாய்த்துவிடும் என்பதை அவ்வாசிரியர்போன்ற பேரறிஞர் முன்னரே ஓர்ந்திருத்தல்வேண்டும். ஓராது அவர் இறுதியில் இப்புறனடைச் சூத்திரத்தைவைத்த பாவமோ இக்காலமக்கள், இலக்கணத்தையே பழையதென்று கழித்துவிட்டு அந்நூலிற்குமோர் இறுதி காண்கின்றனர். புறனடை பொதுவிதி யாயிற்று.

சனசமூக முன்னேற்ற மென்றவோ ரூக்கத்தால் பற்பல இந்நாள் எங்கெங்கும் பேசப்படுகின்றன. இக்கட்டுரை விளம்புவோர், இடையிடையே, "பழையன கழிதலும் புதியன புகுதலும்"-(பெரும்பான்மை அவர்களுக்குப் பின்னடி தெரிந்திராது)-என்ற சொற்களால் தம் கருத்தை நிலைநாட்ட முயல்கின்றதைக் கேட்கநாம் வெகுநேரம் வாய்பார்த் திருக்கவேண்டா. மாரி வறங்கூர்கின்ற இக்காலத்தில் இம்மொழிகளோ பொழிவது ஒருநாளு மொழிவதில்லை. இச்சொற்களைப் பயில்வோர்தம் உரைகளை ஒன்றுசேர்த்து ஆராய்கின்றகாலையில் விளைகின்ற விபரீதங்களை யாரிடத் துரைசெய் தாறுவோம்:—

> "பழையகாலத்தில் இவ்விந்தியநாடு எத்துணைச் சீரும் சிறப்புமாய் நிலமகள் திலகமெனத் திகழ்ந்தது! வீரமும் சற்பும் வாய்மையும்வற்றாத செல்வமும் கல்வியும் களங்கமற்றவாழ்வும் தனது உடைமையாய்ப் பெருமையாய் உரிமையாய்ப் பெற்றிருந்த இத்தேசம், சகோதரர்களே,சகோதரிகளே, இந்நாள் அடைந்துள கதியைக்கண்டு நீங்கள் பொறுக்க வல்லீராயின் பொறுங்கள்........என்னாலோ இயலாது; எனது இந்தியத்தாய் இவ்வாறு வருந்த யான் காணமாட்டேன்... உடல் பொருள் ஆவி, மூன்றையும் அற்பணஞ்செய்து விட்டேன்"

என்ற ஆர்வமொழிகளை அக்கட்டுரைகளிற் கேட்கலாம். இதுவரையில் உரைத்த ஒவ்வொன்றும் உண்மையே. இம்மேன்மக்கள் தாய் நாட்டிற்காகச் செய்கின்ற தியாகங்கள் சிறிதல. எண்ணமுந் தூயதே.

இதன்மேனிகழ்வனவற்றைப் பார்ப்போம். நாமிங்கு மேற்கொண்டவாராய்ச்சிவரையில், கல்வி மாதர்முன்னேற்றம் தீண்டாமை விவாகவயது, கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தொழில்வளர்ச்சி, தமிழின் பெருமை, பொதுத்தேர்தல், ஸைமன் கமிஷன், இவையனைய

விடயங்கள் எண்ணிறந்தனவற்றுள் எதுவாயிருப்பினும், யாம் கூறுவன பொதுவகையிற் பொருந்தும்—

"பழைய பழக்கவழக்கங்களால் பிணிப்புண்டு நாமிப்பொழுது அடிமைகளாய்க் கிடக்கின்றோம். அப்பழைமையென்னும் பேய் இப்பொழுது நம்மைத் தலையெடுக்கவிடாமல் அழுத்திக்கொண் டிருக்கின்றது. ஒருகாலத்தில் அவைகள் உயிர்பெற் றிருந்தன. ஜனங்களுக்கு நன்மையைச் செய்தன. இப்பொழுதோ உயிர்போய்விட்ட பழைய வழக்கமென்னும் பிணங்களை நாம் கட்டித் தழுவுகின்றோம். இதைவிட மதியீனம் வேறு என்னவேண்டும். பழையது பழையதென்று நாம் பற்றிக்கொண்டிருக்கலாமா? பழையன கழிதலும் புதியன புகுதலும்.....என்பதன் உண்மையை யார் மறுப்பார். ஆதலால் பழைமையென்னும் குட்டையாகத் தேங்கி அழுகாமல் புதியபுதிய நீர் பாய்ச்சி நாம் இழந்துவிட்ட அந்தமேன்மையை மீண்டும் பெறவேண்டும். இக்காலததிற் கேற்றபடி நாம் புதியபுதியதுறைகளைக் கைப்பற்றிப் புதியபுதிய வழக்கங்களை மேற்கொள்ளோமாயின், நமக்கு நல்லகாலம் பிறக்கவே பிறக்காது..............."

உருவக நயங்கள் பெய்த ஒழுங்கான வார்த்தைகள் இவை. ஆயினும் இவைகளுள் அடங்கிய பொருளை உன்னித் துணிதல்வேண்டும். பண்டைநாள் சீரையும் சிறப்பையும் மிகைபடப் புகழ்ந்துவிட்டு அன்னதற்கு அறிகுறியாய்மாத்திர மல்லாது காரணமாயுமிருந்த வாழ்க்கைப் பழக்க வழக்கங்களைப் பழையனவென்று பலபட நிந்தித்துக் கழித்துவிடக் கூறுவது தெருண்டவருரைக்கும் பொருளுரையாமோ? பழையதென்ற பான்மையால் எதனையும் பகுத்தறிவின்றிக் கொண்டாடவேண்டு மென்பது எம்முடைய கருத்துமன்று. புதியதென்றொன்றைப் பழிக்கவும்நாம் செப்பவில்லை. பழையவழக்கங்களிற்சில இந்நாள் செத்திருக்கலாம். ஆனால் கொன்றது யார்! கொன்றுவிட்டபிறகு பிணத்தைக் கொளுத்திவிட்டால் போனவுயிர் வந்துவிடும் என்று வாதிப்பது என்ன சூழ்ச்சியென்று விளங்கவில்லை. அக்காலம் இங்கு எல்லாரும் எங்கும் இன்புற்றிருந்தனர் என்பதை நம்புகின்ற நாம் அதற்குக் காரணம் அவரவர்களை இயக்கி நின்ற மனத்தின் தூய்மைநிலையே என்பதையும் நம்புதல் வேண்டும். அந்தத் தூய்மைநிலைக்கு ஆதாரமாயிருந்த ஆசார அநுஷ்டானங்களும் ஏனைய வாழ்க்கைமுறைகளும் ஏற்றனவாயமைந்தன. அத்தூய்மையை இழந்தபின் அவை பிணம் பேய் அனைய கொடியவைகளாய்த் தோன்றல் இயல்பே. அத்தகைய மனத்தூய்மைக்கு உயிர்நிலையா யிருந்த முறைகளையெல்லாம் பழையன பழையனவென் றுதறிவிட்டு, அதனிற்கு நேர் மாறான முறைகளைப் புதியன புதியனவென்று புகுத்தி வந்தால் பண்டைநாட் பெருமையை நமதுரிமையாய் எய்துவ தெங்ஙனம்!

பண்டைநாள் வாழ்க்கை பெருமையோடும் அழகோடும் இனிமையோடும் அமைதியோடும் நடந்ததற்கு இருபெரும் உருளைகளாய் அமைந்தன கல்வியிலும் உழவிலும் அவர் கையாண்ட முறைகள். இக்காலம் கல்வியின் அவசியத்தைப்பற்றி எத்தனையோ பேர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் பேசக் கேட்டு வருகின்றோம். இப்பேச்சுக்களையெல்லாம் பொருத்தி வைத்து ஒப்புநோக்குங்கால் பேதம் பெரிதில்லை "கண்ணுடைய ரென்போர் கற்றோர்", "வெள்ளதால் போகாது வெந்தணலால் வேகாது.........." போன்ற மேற்கோள்கள் சில எடுத்துக் காட்டியபின்பு, "முன்னேற்ற" மடைந்திருக்கின்ற பிறநாட்டுச் சனத்தொகையில் ஆரம்பக்கல்வி கற்றிருக்கின்றவர்களின் விகிதத்தைக் கணக்கிட்டு, அரசாங்கத்தாருடைய வூக்கமின்மையை நம் நாட்டின் எழுதப்படிக்கத் தெரியாதவர்களது தொகையின் மிகுதிக்குக் காரணங்கூறி, ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுடைய குறைகளுக்கு இரங்கி, கல்வியிலாக்கா அமைப்பில் சில சீர்திருத்தங்கள் வேண்டியிருக்கின்றன வென வாதித்து, வாசிக்கத் தெரியாமற்போனால் ஓட்டுச்சீட்டில் குறிபோடுவதெப்படியென அளப்பரியவியப்பெய்தி, இவையனைய மற்றவைகளையும் முடித்த பின்னர்,

"ஆனால், நாம் சிறுவர்களுக்குக் கொடுக்கின்ற கல்வி தற்காலத்திற் கேற்றதா யிருக்கவேண்டும். அக்காலத்தில் காளிதாசனையும் பாணினியையும் தொல்காப்பியமும் சிந்தாமணியும் படித்துக்கொண் டிருந்தார்கள். அவைகளெல்லாம் ஒழிந்தகோத்திற்கு ஏற்றவை-(இவ்வளவு தயை இவர்கள் புரிவதுகூட, அக்கவிகள் செய்த பாக்கியம்)—கம்பனையும்காளிதாசனையும் படித்துக்கொண்டிருந்தால் வயிற்றிற்குச் சோறுகுமா! உலகத்தின் மற்றப்பாகங்கள் அடைந்திருக்கின்ற "முன்னேற்றத்திற்" கிணங்க ஒவ்வொரு பையனையும் அவனவன் தன்மைக்குத் தக்கபடி ஒவ்வொரு தொழிலில் தேர்ந்தவனாக ஆக்கிவிடவேண்டும். எலக்டிரிஸிடி கெமிஸ்ட்ரி முதலிய சாஸ்திரங்களையும், பெரும்பெரும் தொழிற்சாலைகளை அமைத்து நடத்துதற்குரிய திறமையையும் போதிக்கவேண்டும். அரசாங்கத்தாரும் நம் நாட்டுத் தனவந்தர்களும் பொருளுதவிசெய்து தக்கபிள்ளைகளைத் தேர்ந்து அயல்நாடுகளுக்கனுப்பி, அங்கங்கு விருத்தியடைந்திருக்கின்ற தொழில்களையும் வியாபார வர்த்தக முறைகளையும் பயிற்றிவர வேண்டும். ஒரு குண்டூசி வேண்டுமானாலும் நாம் வெளிநாடுகளிலிருந்து வாங்கவேண்டியிருப்பது என்ன அவமானம். முன்காலத்தில் எல்லாரும் காவியம் நாடகம் அலங்காரம் தர்க்கம் வியாகரணம் மீமாஸம் கற்றனரே என்றாலோ, இபொழுதும் நமது பண்டிதர்கள் அவைகளைக் கற்றுவருவார்கள். நாம் அவர்களை மிகுந்த கௌரவமாக நடத்தவேண்டும். நமது அரசாங்கத்தாரோ அவர்களைத் தக்கபடி ஆதரிப்பதில்லை. நாமெல்லாரும் வர்த்தமானப் பத்திரிகைகள் ஒன்றுவிடாமல் படித்துக்கொண்டு வரவேண்டும். இல்லையெனில் உலகத்தின் பற்பல பாகங்களில் நடக்கின்ற செய்திகளை எப்படி அறிவது.நமது பாடசாலைகளின் முறைகளை அடியோடு மாற்றவேண்டும். எங்கெங்கும் தெருத் தெருவாய்ப் பள்ளிக்கூடங்கள் வைக்கவேண்டும். பிள்ளைகளுக்குத் தச்சுவேலை நெசவு பயிர்த்தொழில் இவைகளையெல்லாம் முதலிலிருந்தே சொல்லிக்கொடுத்துக்கொண்டு வரவேண்டும். முன்னேற்ற மடைந்திருக்கின்ற ஆஸ்திரேலியாவில் எல்லாருக்குந் தச்சுவேலை தெரியும். தன்பெட்டி உடைந்துபோனால் அங்கு ஒவ்வொருவனும் தானே பழுது தீர்த்துக்கொள்ளக் கூடியவனா யிருக்கின்றான். பெண்களுக்குங் கல்வி வேண்டும். ஔவையார் இருந்த நாடன்றோ விது! சீமையிலே எத்தனை பெண்கள், கல்வியிருப்பதால் 'பாரிஸ்டர்களா' யிருக்கின்றனர்! ஜெபானில் எவ்வளவோ பெண்கள் இஞ்சின் ஓட்டுகின்றார்கள். நம்முடைய நாட்டிலுள்ள பெண்கள் கல்வியில்லாததாலன்றோ அடிமைகளாயிருக்கின்றனர்! இங்கிலாந்தில் பொதுத்தேர்தல்களில் எத்தனை மாதர்கள் அபேக்ஷகர்களாக நிற்கின்றனர். இந்நாட்டிலோ இரண்டொருவர் கிடைப்பது அருமையாயிருக்கின்றதே. கல்வியில்லாத ஒருத்தி தன்புருஷனுடைய ஆசையைப் பெற்றிருக்க முடியுமா? தன் குழந்தைகளை வளர்க்க முடியுமா? சுகாதாரம், வீட்டுக் கணக்கு வைத்துக்கொள்கின்ற விதம், கிழிந்த ஆடைகளை அப்போதைக்கப்போது தைக்கக்கூடியதிறமை முதலியவைகளைப் பெண்களுக்கு நாம் முக்கியமாய்ப் போதிக்கவேண்டும். வீட்டுக்கணக்கு எழுதிவைத்துக் கொள்ளத் தெரியாததாலன்றோ அனேக மாதர்கள் வரவிற்குமேல் செலவுசெய்து கஷ்டப்படுகின்றனர். நமது சிறுவர்சிறுமிகளுக்கு எல்லாப் பாடங்களையும் தாய்ப்பாஷையிலேயே போதிக்கவேண்டும். இங்கிலீஷ் கற்பித்துக்கற்பித்து அவர்களதுஇளஞ்சீவனையெல்லாம் நசுக்கிவிடக் கூடாது. இதற்காக 'அல்ஜீப்ரா,' 'ஜாமெட்ரீ,' பூகோளம், 'பிஸிக்ஸ்' 'கெமிஸ்ட்ரி' எல்லாபாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து எழுதுவதற்குப் போராசிரியர் பலர் முன்வரவேண்டும். அதற்காக ஒரு 'கமிட்டி' ஏற்படுத்தவேண்டும்."

இன்னவகைத்தாய வாசகவரிசைக ளெண்ணிறந்தன யாவரும் கேட்டும் படித்து மிருப்பார்களாகையால் இன்னுஞ்சில செப்பல் மிகை. ஆயினும் இத்தகைய சொன்மாலைகளுடே நூலைப்போன்று நுழைந்து நிற்கும் கருத்தைச் சிறிது சோதித்தல் மிகையாகாது.

பெருமையுற்றிருந்த பண்டைநாட்களில் "கல்லாது நிற்பார் பிற ரின்மையால்" எல்லார்க்கும் எல்லாப் பெருஞ் செல்வங்களும் எய்தியிருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, இக்காலத்திலும் கல்வி வேண்டுமெனல் தக்கதே. ஆனால் எல்லாரும் எங்கும் அந்நாள் கற்று நின்றன, தச்சுவேலையும் தோல்பதனிடவும் பானையுஞ்சட்டியுஞ் செய்யவும் எந்திரங்களோட்டவும் அல்லவே. அவ்வந்தத் தொழிலிற்குரிய கைவினைஞர் அவ்வத் தொழிலையும் ஈடும் எடுப்புமின்றிக் கற்றிருந்தனர். மற்று இத்தொழில்வினைஞர் உள்பட அனைவருங் கற்றிருந்தன இலக்கண இலக்கியங்களேயாகும். அந்நாள் கல்வியின்நெறியும் முறையும் அவை. இன்றைக்கோ கல்வியைப்பற்றிப் பேசவருவோர், அந்நெறியையும் முறையையும் பழையனவென்று கழித்துவிட்டனர். ஆனால், காளிதாசனையும் கம்பரையும், காவிய நாடக வலங்கார சாஸ்திரங்களையும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற மேற்கோளை வெளிப்படையாய் எடுத்துக் காட்டிக் கழித்துவிடவேண்டும் என்று சொல்வதற்கு வாயோ சிறிது கூசும். ஆதலால் அவைகளைப் பண்டிதர்பால் கைபடைத்து விடுகின்றனர். தமக்கு வேண்டாததற்கெல்லாம் பாத்திரம் பேதைப் பண்டிதன். இவ்வாறு செய்கின்றோமே என்ற இரக்கத்தால்தான் இவர்கள் பண்டிதர்பால் அத்துணைப் பரிவுகாட்டப் புகுகின்றனர். எந்நாளும் நம் நாட்டிற்கோர் ஜீவதாரமாயிருக்கின்ற பண்டிதப் பெருமக்களுக்கு அன்னார் பரிவு வேண்டா. தாம் கற்று மனமாற அநுபவிக்கின்ற அக் கலையின்செல்வமே அவர்களுக்குப்போதும். யார் கொடுக்கும் கூலியையும் அவ்வுத்தமர் எதிர்பார்க்கவில்லை. பண்டிதர்களுக்குப் பிறர் செய்யக்கிடக்கின்ற நன்றி அவர்கள்பால் காவியநூல்களைக் கற்று அவர்களோடு கலைநலந் துய்த்து ஏனையோர்க்கு மவ்வின்பத்தை வாழையடி வாழையாய் அளிப்பது ஒன்றே. பண்டிதர்மாட்டு இலக்கண இலக்கியங்களை அனுப்பிவிடுவதனால் மாத்திரமல்லாமல் கல்விமுறைகளில் புதியன புகுத்துவதினின்றும் பவணந்தி முனிவரது இறுதிச்சூத்திரம் இக்கட்டுரைகளினுட் புகுந்து களிநடம் புரிகின்றதென்பதை யுணர்தல் அருமையன்று.

இங்குரைத்த இவைகளை நினைவிற்கொண்டு,இன்னவைகளுக்கிடையே திருவள்ளுவர் நிலை என்னுகின்ற தென்பதை இனிக் காண்போம்.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

3. விந்தை வலவன்

தொழுதேழுந் தோகைபை அன்பனும் தனதிரு கரங்களால் தழுவியே எடுத்துத்தன் மார்புற இணைத்துப் பின் எதிர்நிறுத்தி "என்ன இது பஞ்சரா, உளம் கலங்கி இருத்தலால் நீ பொருந்தாச் சொற்கள் பற்பல உரைக்கின்றாய்! உயிர் தேடித்திரியும் உடலென்ன நான் நாடுவது நின்னையே! ஒரு நீ யெனக்கு வாய்த்தபின் உறவினர் உயர்வையோ ஆராயப் புகுந்தேன். நீ பிறந்த குலம் எதுவாயினும் அது கோடி பெறும். எனது குறையறியாக் காதலும் நின்பால் குறைவடையும் என நீ ஐயம் கொள்வதற்குக் காரணமாய் நான், நினையாமல் செய்த பிழை ஏதேனும் உளதேல் அதனைத் திருமகளனையாய், இன்றே பொறுத்தி" என்று வேண்டினான்.

304 பக்கத் தொடர்ச்சி.

தம்முள் மாறிமாறித் தாழ்மைபூண்ட காதலர் இருவரும் கலங்கிய உரைகளாலே காலம் சிறிது போக்கினர். இருவருக்கும் இடைவளர்ந்த கழிபேரன்பு ஒரு விதத்திலும் ஐயத்திற் கிடமானதன்று. எனினும் ஆசைதான் வரம்பிகந்து ததும்பும்போது அது வியாகுலத் தன்மையை அடைதல் இயல்பு.அன்றியும் யுத்தத்தினிடையே என்னவிபத்து விளைய லாகுமோ எனும், உரைக்க ஒண்ணாததும் உருத்தெளியாததும் ஆன ஒரு நினைவின் பாரம் இருவர் மனத்தையும் பிழிந்து அழுத்தியதுபோலும். இதனால் காதலுள் களிக்கவந்த இவர்தமக் கிடையில் துன்பமே தோன்றலாயது. ஆனால், உற்ற துன்பம் உரைத்தால் தொலையும், என்னும்பான்மையில் தொடர்ந்தவர் பேசப்பேச அவர் மனமும் சிறிது சிறிதாய் நிலைக்கு வந்தது. முடிவினில் வாசவன், "பஞ்சரா, நிற்பிரிந்து நானேகும் நெறியொன்று காண்கிலேன். பேதாய், பாசறையும் போர்முனையும் எண்ணியெண்ணி நீயேங்க நின்னைத் தனியே நீத்தகல்வது எங்ஙனம்! போவதற்கு மனம் எழும்போது கால் வரவில்லை; கால் எழும்போது மனம் வருவதுமில்லை. என் செய்வேன் பாவாய், படையும் நெடுந்தூரம் படர்ந்திருக்கும்......" என்று அயர்ந்தான்.

"போகாது தீராதாயின் அன்ப, இன்னும் சில நேரமேனும் இருந்து செல்வாய்."

"பஞ்சரா, அப்பாலத்தி னருகே என் தேர் காத்திருக்கின்றது. பாகனும் ஒருவன் உளன். தேர்ந்து அவனை அமைத்ததும் அரசனே. அவ்வலவனைப்

பார்த்தால், பஞ்சரா......'' என்று வாசவன் கூறிவந்ததை அவள் தடுத்து, ''ஐய, நீயே அவனைப் பார்த்திரு. வலவனது வர்ணனையை நான் இங்குக் கேட்கவில்லையே!'' என்றனள்.

''அற்றன்று பஞ்சரா, கேள். அவன் பார்வையாலும் பேச்சினாலும் என்னை அடக்கிவிடுகின்றான். இந்நேரம் நான் இங்குத் தங்கியதற்கே கோபம் கொள்வானென்று எண்ணுகின்றேன்.''

''பாகனுக்கா அடங்குகின்றாய்? உத்தரன் இரத்தமுண்டோ உன்னுடலில், அரசே'' எனப் பஞ்சரவல்லி வாசவன் கன்னத்தில் விளையாட்டாய்க் கிள்ளினாள்.

''நான் உத்தரனோ அல்லனோவென்று போர் முடிந்தபின் உன் சுயோதனனையே கேட்டுக்கொள். ஆனால் இப்பாகன் அக்ஞாதவாசமே புரிகின்றான் என நீ அவனைக் கண்டிடின் எண்ணுவாய். ஆணின் உடை, பெண்ணின் குரல். பெண்ணின் குரலோடு ஆண்மகன் திறல். அழகோ காண்பார்க்குக் கண்விருந்து. மிழற்றும் மொழி எல்லாம் முக்கனி கலந்த நற்றேன். கொழுந்து விட்டொளிர்தரும் இளமையே உருவெடுத்து என் தேர்முன் அமர்ந்து வருகின்றது!''

''காதல, இப்பாகனது எழில்நலம் புகழ்வதில் ஒரு பாதி என்னை நீ எக்காலும் புகழ்ந்து கேட்டிலேன். அருகிருக்கும் அவனையே மகிழ்ந்து எளியளை அடியுடன் மறப்பாய், மறப்பாய்!''

'' உண்மையில் பஞ்சரா இக்காலம் அவனங்கும் நீயிங்குமாக இருக்கக் கண்டிலேனேல் நீயே உள்வரிக்கோலம்பூண்டு எனக்குப் பாகனாய்ப் போந்துளாய் என்றே மதித்திருப்பேன்.''

''ஆயின், தேர்த்தொழில் தொண்டன் யான் அல்லள் எனும் ஐயம் தீர்ந்து என்னைப் பெருமை படுத்தினாய். வாசவ, போ போ, இனி இங்குக் காலம் கழிக்காது போ. நின் மனத்திற்கினிய பாகனைப் பிரிந்து இவ்வளவு நேரந்தான் என்வயின் பொருந்த எவ்வாறு தரித்தாயோ! பாவம், பேதைப்பாகன் வழிபார்த்திருப்பான், போ, போ,'' என்று பஞ்சரவல்லி ஊடினாள். ஊடக்கண்ட இளவரசன், ''முன்னாள் முசுவொன்று புரிந்த கைங்கரியம் இன்று அப்பாகனைச் சார்ந்ததோ! இதற்கேற்க அவனது பேர்தான் அங்கதன் என்பதும் தக்கதாயது'' என்று சோர்வெய்தவும், அவள் போலிச் சினம்மாறிச் சிரித்துவிட்டனள். இருளும் சூழ்ந்தது. காதலியிடம் விடை பெற்று இரண்டடியகன்ற வாசவன் திரும்பிவந்து, ''என்னுடன் நீயுமே ஏகினால் என்ன? பஞ்சரா! செயப்பாவை, உன்னைத் தேரினோடு கொண்டு சமர்தனில் சேரும் பாக்கியம் எனக்கு உளதாகும். வந்திடு, காதலி, வந்திடு,'' என அவள் கரங்களைப் பற்றினன். அவளோ, '' ஐய, ஆண்மையே கொண்டுசென்று வென்ற அச் சமர்க்களத்தில் செயத்திரு புணர்ந்த தோள்களோடும் வீரராயினோர் மீள்வர் அல்லாது, போகும்போதே அவளை அழைத்துச் செல்வது போர் முறையில் புதுமையாகும். அன்ப, செல். எங்கு நீ இருப்பினும் அங்கு நான் அண்மியள் உனக்கு அல்லளோ,'' என்றனள்.

'' இனியாய், யான் வருமளவும் தனியே நீ என் நினைப்பாய், என் செய்வாய் என்றெண்ண ஏங்குகின்றேன்.''

'' நாம் வருமளவும்—எனது ஆவி உன்னைவிட்டு அரைக்கணமும் பிரியாதாகையால் 'நாம்' எனப் பன்மையிற் கூறினேன்—நாம் வருமளவும் இடை நிகழ்வனவெல்லாம் கனவே யென்று கருதியிருப்பேன்.''

''என் வலவன் இதைக்கேட்டால்இவ்வுலகமே ஒரு கனவு என்று உரைப்பான். என் கண்ணே, ஏகுகின்றேன். வெற்றிக்கும் என்வருகைக்கும் நீ வழிபடும் தெய்வத்தை அருச்சனை புரிந்திரு'' என்று அவளுக்கு ஆழ்ந்ததோர் முத்தமிட்டு வாசவன் போயினான்.

போயின வாசவன் தேரிருந்த இடம் மறுபடி சேர்ந்தபோது, அங்கதன் மத்திகையும் கையுமாய்த் தேர்த்தட்டிற் வீற்றிருக்கக் கண்டு, ''வலவ, நெடுநேரந் தாழ்ந்தேனோ? இரவினில் வழிதெரிந்து போக வல்லையோ?'' என்று கூறினனாய் இரதமேறி யமர்ந்தான். அவ்விரதத்தில் பூட்டிய குதிரைகள் நான்கினில் ஒன்று இளைப்பு மேலிட்டு நெடிதுயிர்க்கு நாசியதாய், வாய்வழி வழிந்த நுரையோடும் தோன்றுவதை அறிந்து அதன் காரணம் யாதென வாசவன் வினவப் பாகனும், ''வேந்தே, உயர்தரக் குதிரைகள் நின்ற நிலையிலேயே கடிது ஓடியதாகக் கனவு காணும் என அசுவ இலக்கணம் ஆய்ந்தோர் கூறுவர். அக்கனவினால் நெட்டுயிர்ப்பும் வாய்நுரையும் இப்புரவி காட்டுகின்றது போலும்'' என்று எதிர் மொழிவதன் முன் தேரும் வில்லுமிழ்ந்த அம்புபோல் விரைந்தோடலாயிற்று.

மாறன் பாப் பாவினம்.

[309-வது பக்கத் தொடர்ச்சி]

நேரிசை யாசிரியப்பா.

விசும்புதூர்த் தெழுந்த வியன்சினை மரத்தின்
பசும்புறத் தீங்கனி பரீஇநுகர் கடுவன்
புரப்பவர் குறுகுபு புலம்புறீஇப் பொங்க
ரிரிந்தலம் போதரு மீர்ந்தண் சோலையுட்
புளிங்கறி வேட்டபுன் றொழின்மையர்க் குறுது
பழிப்பின் றுகப் பாகுசெய் தட்ட
கோதறு மாண்பாற் குழம்புபொற் கலத்தினுட்
பெய்திருந் தாறிய பெற்றி போல
முடவடிப் பலவின் முட்புறக் குடக்கனி
வேர்முதற் பழுத்து விரிந்தபொற் றீஞ்சுளை
பதனழ பான்மைப் பாய்புன லூர
நூற்கடற் பழகிய நுண்ணுணர் வுடையோ
ராற்றலிற் பரவுசீ ரரங்கனுக் கமைந்த
பாற்கடன் முற்றப் பருகுதற் கெழுந்த
பேராப் பெரும்பசி யாளர்தம் முன்ன
ராரா வள்ளத் தமுதமைப் பவர்போற்
சிறுவரை யின்பத் துறுதுய ரிழைத்ததற்
கிரத்த லீங்கியல் பன்றாற்
பரத்தையிற் பிரிதனின் பண்பா கும்மே.

இஃது, ''உள்ளுறையுவம மேனையுவம மெனத், தள்ளாதாகுந் திணையுணர் வகையே.'' என்பதனால், ''புளிங்கறி வேட்ட புன்றொழின்மையர்க்குப் பாற்குழம்பு பொற்கலத்தினுட் பெய்திருந்தாறிய பெற்றிபோல'' வென்று, புலப்படக்கூறு மேனையுவமம், புலப்படக் கூறாத வுள்ளுறை யுவமத்தினைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து அதனுட் கூடி நின்றது. ''விரிகதிர் மண்டிலம் வியல்வியல் விசும்பூர்தர'' வென்னு மருதக் கலியுள்ளும், ''நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போல'' வென்ற வினையுவமந் தாமரைமலர், ''பனிவாரத் தளைவிடு'' மென்ற வுள்ளுறை யுவமத்தைத் தருகின்ற, கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது; அன்றியும், ''உடனுறை யுவமஞ் சுட்டு நகை சிறப்பெனக் கெடலருமரபி னுள்ளுறை யைந்தே'' என்ற, பொருளியற் சூத்திரத்திற் சிறப்பென்ற வுள்ளுறை, இவ்வினை யுவம முள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக் கொடுத் துள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றவாறு காண்க.

இது, பரத்தையிற் புணர்ந்துவந்த தலைவன் வரவுகண்டேடிய காமக்கிழத்தி யூடியவாறுகண்டு சார்ந்த தலைவனூட றீர்க்கின்றான் கூறியது. இதனுள் ''தலைவி தோழி காமக்கிழத்தி யுழையர்'' என்றோர் கூற்று வந்தன. ஒழிந்தோர் கூற்றும் வந்தவழிக் காண்க. 10

நேரிசை யாசிரியப்பா.

திரைகொழித் துயிர்ப்பன திகழ்வலம் புரியே
வலம்புரி யுயிர்ப்பன வாணித் திலமே
நித்தில முயிர்ப்பன நெடுவெண் ணிலவே
நிலவுற வடர்பிணி நெகிழ்வன குமுதங்
குமுதமங் குயிர்ப்பன குளிர்தெண் ணறவே
நறைநதி
சுழித்தெடுத் தனவாய்த் துறைதொறுந் துறை
[தொறுந்
தெழித்துயிர்ப் பனவுங் குருமணித் திரளே
மணித்திரள்
பருதிபோன் றிரவினைப பகற்செய் வனவா
லருகினின் றயர்வன வம்புய மலரே
மலரினை
அளகமர் புறவினு ளான்புன லுணமரீ இயக்
குளகென மாந்துபு குழக்கன் றுள்ளலும்
உள்ளிப்
படவழிப் படவழிப் பணைமுலைத் தளைவழி
குடமடித் தீம்பால் குதித்திரு நிலத்துற
வப்பால்
ஆறிரண் டெனபகுத் தலைத்தெழு நனந்தலை
வீறுட னெக்கர்கூர் வெண்மணல் வெள்ளிடை
நள்ளிடை
மதியக டுரிஞ்சிய மழைதவழ் பொதும்பர்
புதியமென் மலரினைப் பூத்த காயா
வைகலுஞ்
சொரிதரு நாண்மலர் துவன்றுயர் நீளிடை
விரிவன வாகி விழுமிதின் விளங்கும்
அத்திறம்
பாலா றியினடுப் பரிமள வரவணை
மேலாய் விழிதுயில் விமலனைப் பொருவருஞ்
சங்கணித்
துறைபயில் பொருநைச் சொற்றமிழ்க் குருகூ
ரிறைவநின் பொன்னடி யிறைஞ்சுகே னின்னும்
நானிலத் தொருபிறப் புளதா நன்கர்
மானிடப் பிறப்பி லானுரு வெனலா
மதுமுத லியபெறற் கரியன வெளிமையிற்
பொதுவற வெய்திநிற் புகழ்புல வனெனாப்
பருமணி குயிற்றிய பசும்பொற் கும்பத்
தருண்மலி மஞ்சன மாடிய காலையி
லுத்தம வீரவா டையுமுறாக் கொலியலு
மத்தக வடைந்தவ ணலங்கரித் தெழுதிருக்
கைத்தலச் சேவையு முத்திரைக் காமுஞ்
சித்திர நாபியிற் செறித்தகைத் தலமும்
புத்தமு தனையசெந் தமிழ்மறைப் பொருள்புணர்
முத்தமுந் திருப்பவ ளமுங்குறு மூரலு
மறுத்துடைத் தொளிர்முழு மதிமுகச் சோதியு
முறப்புடைத் திருக்குழை யுருவமும் புருவமும்
நயனமர்ந் தருள்புரி நயனும் புயமு
மயன்முதன் மதித்தபத் மாசனத் திருப்பும்
வகுளா பரண மார்பமு மவுலியு
முகுளா திணைவிழி முழுதுறு காட்சியிற்
கூடிய வுணர்வொடுங் குழைந்தெழி னாவாற்
பாடிநின் றுடியும் பன்னாள் கழிந்தபின்
பொருவில்பே ரின்பமும் புணர்வான்
ஒருவரந் திருவுள முவந்தருள் கெனவே.

இது, நாற்பத்தைந்தடியவா யிடையிடைத் தனிச்சொற் பெற்றுவந்த, நேரிசை யாசிரியப்பா. என்னை? ''சீர்கூ றாத னேரடிக் குரித்தே'' யென்பதனா லறிக. இது, திணை - பாடாண். துறை - கடவுள் வணக்கம். 11

நேரிசை யாசிரியப்பா.

கார்கதழ் பரிநெடுந் தேரின்முந் தியதாற்
காகோ தரவணைக் கண்டுயி னெடுமால்
கார்வா னத்துகு மாரியும் வலவா
காரிகை மையுண் கண்கலுழ் மாரியும்
காமனங் கணைமலர் பொழிநறை மாரியும்
காட்சிமுன் னீரிற் கலந்திவ ணெதிர்கொளுங்
காலிருள் கொடாதகை யறிந்தொரு கனவரை
காணுதி யவணுறக் கடாவுதி யிரதங்
காவலுன் னுயிர்க்கினி யதுவே
காவலின் றெனதுயிர் உறுதுயர்க் கடற்கே.

இதுவும், நேரிசை யாசிரியப்பா. இஃது தடிதோறு முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையின், அடிமோனைத் தொடை. பகுதி—பொருள்வயிற் பிரிதல். துறை - பாகனொடு கூறல். 12

நேரிசை யாசிரியப்பா.

அணங்கனு ளுறையுளென் பதுந்தா மரையே
சுணங்குலா மிளமுலை துணைத்தா மரையே
யொளிர்முக மரங்கனுந் தியந்தா மரையே
தெளிதரின் மதர்விழி செந்தா மரையே
தொடிக்கையுந் துணைத்தா மரையே
யடிச்சுவ டணியிழா யலர்தா மரையே.

இஃது தடிதோறும ஈற்றில் எழுத்தானுஞ் சொல்லானு மொன்றிவரத் தொடுத்தமையான், அடியியைபுத் தொடை. பகுதி - சேட்படை. துறை - அவயவங்கூறல். 13

நேரிசை யாசிரியப்பா.

அராவணை மிசைத்துயி லமர்ந்தரு ளரங்கனைக்
கராசல மூலமென் றழைத்தருள் கண்ணனை
முராரியை யிரணியன் மதுகையை முருக்கிய
நராரியை நயந்திறைஞ் சினரே
தராதலம் விரும்புமந் தாமமெய் துவரே.

இஃது தடிதோறு மிரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா னடியெதுகைத் தொடை. 14

நேரிசை யாசிரியப்பா.

செந்தா மரைகள் புணர்திரு வரங்கன்
கார்கடல் வண்ணன் கண்ணனெம் பெருமான்
வாமனன் கேசவன் மாதவன் சீதர
னெடியோ னீரடி யெனநில மளந்தோ
னடியிணை நறுமல ரதுதாய்
முடிமிசை தரிப்பவர் முத்தரா குவரே.

இஃ தடிதோறுஞ் சொல்லாலும் பொருளானு மூரணத் தொடுத்தமையா னடிமுரண்டொடை. 15

நேரிசை யாசிரியப்பா.

ஆஅ னிரையகத் தருளரங் கேச
னீஇ னிறக்கரி நிழன்மருப் பொடித்தோன்
பூஉ மகள்புணர் புயலடித் துணையிற்
றேஎ மலரிடு மவர்வினை
போஒ மொருநொடி யினிற்புறக் கொடுத்தே.

இஃ தடியளபெடைத் தொடை. 16

நேரிசை யாசிரியப்பா.

நாவே வினிய நலனுடை முதற்பொருள்
பொருளுரை யாய்தரிற் புகலமற் றளதே
யுளதே வண்டிமி ருறுமல ரோடை
யோடை மால்வரை மூலமென் றுரைசெய
வுரைவிசைத் தடங்கா வொல்லையிற் குறுகுபு
புனிற்று வெனவருள் புரிந்திடர் செகுத்த
வறைபுன லரங்கத் தமுதினை யன்றியும்
மதித்தொரு முதலினை மகிழ்ந்து
துதிப்பது முளவோ சுரர்பெரு நாவே.

இதனுள் நான் கந்தாதித்தொடையும் வந்தமையி னந்தாதித்தொடை. 17

நேரிசை யாசிரியப்பா

திடனே திடனே திடனே திடனே
யிறைதிரு வரங்க னென்பது
மறைமுத லரியென வாழ்த்திய துறினே.

இஃ தோரடிமுழுதும் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையா னிரட்டைத் தொடை. 18

நேரிசை யாசிரியப்பா

மாறனை யொத்தார் விழுதீ நரகிற்
சுடுநெறி யினியார் செல்வர்
விடலைநீ கங்கு லாறியே குதியே.

இது மோனைமுதலாய முழுதுமொவ்வாது வந்த செந்தொடை. நேரிசை யாசிரியப்பா. 19

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

7. திருமணம் செல்வகேசவராய முதலியாரவர்களும், மறைமலை யடிகளும் ஸ்ரீ. இராமானுஜனும்.

307 பக்கத் தொடர்ச்சி

பரிதிமாற்கலைஞரின் தமிழிலக்கிய காலவகுப்பைப் பின்பற்றிக் கம்பனையும், ஆழ்வார்களையும், தேவாரத்தாரையும் இடைக்காலத்தில் வைத்துக் கம்பனைமட்டில் ஆராய்ச்சிக்கு ஸ்ரீஇராமானுஜர் எடுத்துகொள்கின்றார். "கம்பர் நிலையை யறியின் அது ஏனையவர்க்கும் ஒக்கும்" என்பது அவர் நினைவு. இடைக்காலத்தில் கம்பரை வைத்தனராதலின், கம்பரின்குறைகளை எடுத்துகாட்டி, இக்குறைகள், "இயற்கைநெறி" பிறழ்ந்து நின்றதனாலேயே கம்பனுடையகவிதையில் விளைந்தன வென்பதையும், இதனால் கம்பன் பண்டைய புலவர்தம்மினும் தாழ்ந்தானென்பதையும் உணர்த்துவதேஸ்ரீஇராமானுஜனுக்குக் கடமையாய் நின்றது. திருமணம் செல்வகேசவராய முதலியாரவர்களின் மொழிகளை எடுத்தியம்பி அக்கடமையை ஆற்ற முயல்கின்றார் ஸ்ரீ. இராமானுஜன். சொல்வர், திரு முதலியாரவர்கள்: "கம்பர் முன்னோர்சிறப்பும் பின்னோர்களுடையகுறைபாட்டில் ஒரு கூறும் உடையவர்" (கலாநிலயம்: வால் 2: பக் 213) இதனால் முன்னோர் குறையற்றவ ரென்றாவது, அவர் தம்மினும் கம்பன் கவிதையிற் றாழ்ந்தவன் என்றாவது போதருகிறதோ! முன்னோர் சிறப்பும்,பின்னோர் குறைபாடும் யாவையென மொழிவர் திரு.முதலியாரவர்கள்: "புனைந்துரைவகையால் புலவர் இல்லனவும் கூறுபவெனின், முற்காலத்துக் கவிகள் உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு, நல்லோர்க்கு உள்ளனவற்றை, ஒழிந்தோர் அறிந்தொழுகல் அறமாகுமெனக் கருதி நல்லோர்க் குள்ளனவற்றிற் சிறிது இல்லனவும் கூறுவர்". "உள்ளனவற்றில் சிறிதுஇல்லனவும்" கூறுவது புகைப்படமோ? இன்னுஞ் சொல்வர்: "முற்காலத்துக் கவிகள் தன்மைநவிற்சியை விரும்புவோர். பிற்காலத்துக் கவிகள் உயர்வு நவிற்சியை விரும்புவோர்" 'தன்மை நவிற்சி' யென்பது "உள்ளதை உள்ளவாறே கூறுவது" என்ற பொருளையே கொள்ளுமோ? மலரொன்றைக் குறித்து மலர்களுள் இதனினும் உயர்ந்த மலர்வேறொன் றில்லையென்பது உயர்வுநவிற்சி. யாதேனும் ஒரு மலரைக் கையிலேந்தி "என்னே இதன் இன்பம்!" என்பது தன்மைநவிற்சி புலவரின் பொய்யான புனைந்துரையும் தன்மைநவிற்சியும் கலந்தால் உயர்ந்ததோர் கவிதையாம். "கதிர்.விழுங்கி, மதியுமிழ்ந்து வந்தவிம் மருண்மாலை (சிலப்பதிகாரம்) யென்பது தன்மைநவிற்சியே. "தண்டலை மயில்களாட" (கம்ப இராமாயணம்) என்ற, மிகமிக அழகிய பாசுரமும் தன்மைநவிற்சியே. எனின் தன்மைநவற்சியை விரும்பினால், ஸ்ரீ இராமானுஜனது "இயற்கை நெறியை"விரும்புகிறோம் என்று கொள்ள இடமில்லை.

மறைமலையடிகளின் அழகிய உரையாவது ஸ்ரீ. இராமானுஜனது முடிபைத் தழுவுகிறதோ வென்பதனை ஆராய்வோம்."தம்மன நினைவிற்கு இசைந்தவண்ணமெல்லாம் உலகஇயற்கையினைத் திரித்துக் கூறாமல் அவ்வுலக இயற்கையின் அழிகின் வழியே தமதறிவினைப் பொருந்தவைத்துத் தம் நினைவினை விரிவு செய்து விளக்கி வந்தனர்" என்பர் மறைமலையடிகள் (க: நி: வால் 2: பக் 213). ஸ்ரீ. இராமானுஜனைப்போல் "இயற்கையின் வழியே" என்றுரையாமல் "இயற்கையின் அழகின் வழியே" என்று அவர் மொழிவதை ஸ்ரீ இராமானுஜன் குறித்திலரே! இவ்வழகு கவிஞன் மனத்தது. அவன் மனத்திருந்தெழுந்து இயற்கையைப் போர்த்த பின்னரே, இயற்கையில் அவ்வழகை நாம் காண்கின்றோம். புகைப்படம் பிடிப்பவன் தனது மனத்துள்ள அழகிலும் கலையுணர்விலும் அவன் எடுத்துள்ள படத்தைத் தோய்க்கமாட்டான்; தோய்க்கவும் ஆற்றான். "பங்குனி மாதத்தில் மாமரம் மலர்ந்தது" என்பது ஸ்ரீ. இராமானுஜனது இயற்கைநெறி வழுவாத ஒரு செய்தி. ஆனால் இது கவிதையன்று. இதனைக்கொண்டு கவிதையமுதம் அருளாக் கவிஞர் பெருமான் இரவீந்திரநாதன் வரவேண்டும்: "இளவேனிற் காற்றிலே, ஒருவருமறியா ஒன்றிற்கு மாமலர்கள் தமது செய்திகளைத் தள்ளி யனுப்புவன; பகல் முழுதும், இரைந்து நின்று இளந்தளிர்கள் கனவுகள் காணுவன" (Song of the Bird in The Cycle of Spring) "இயற்கை யழகின்வழியே" அறிவைச் செலுத்தும் கவிஞரின் நூல்களையும், "நல்லோர்க் குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறும்" பாவாணர் பாக்களையுங்கொண்டு பண்டைக்கால நிலைமையை மிகைகுறை யில்லாதறிந்தேன் என்ப தெங்ஙனம்?

8. பண்டைநாட் புலவரும், பின்னாள் தோன்றியவரும்.

பண்டைநாட் புலவரோ மற்றுப் பின்னாள் தோன்றியவரோ யாவரே கவிதையிற் பெரியர் என்னுங் கேள்வி பயனற்றது என வொதுக்கப்படுகின்றது என்று யான் மொழிந்துளேனாயினும், அவ்வாறு சொல்வது மறைமலையடிகளையோ, திரு. செ முதலியாரவர்களையோ, மற்று ஜான்ஸனையோ போப்பையோ பொய்யர்களாக்கவேண்டும் என்ற கருத்தினாலன்று; பொய்யர்களாக்கவுமில்லை. அவர்கள் சொல்வன யாவும் நிசமேயாயினும், அவர்கள் எதைப்பற்றிப் பேசுகின்றார்களோ அவ்விஷயம் முக்கியமானதன்று என்பதே என் நினைவு. பிறமொழிகட் கெங்ஙனமாயினும், தமிழ்மொழிக்கு அது முக்கியமானது என்பர் ஸ்ரீ. இராமானுஜன். யான் மொழிகளைப் பற்றிப் பேசவில்லை. இலக்கியங்களைப்பற்றிப் பேசுகின்றேன். பிறமொழிகளுக்கும், தமிழ்மொழிக்கும் இலக்கியத்தைப்பற்றிய பொது ஆராய்ச்சியிலும், காவிய இலக்கணத்தின் பொதுப் பகுதிகளிலும் பேதம் இல்லை இலக்கியம் என்பது கலை; மொழி யென்பது ஒரு கருவி. தமிழ்மொழியைப் பற்றிப் பேசுகிறேன் என்பது, யான் பேசுவது தவறென்பதை உணர்த்தப் போதுமான காரணமன்று என்று நினைக்கின்றேன். வேறு காரணங்கள் ஸ்ரீ, இராமானுஜனிடம் உளவாயின் அறிய ஆவலுள்ளவனா யிருக்கிறேன்.

இவற்றால், சிலப்பதிகாரத்தைப் பற்றி ஸ்ரீ. இராமானுஜன் கூறும் புகழ்மொழிகள் (இடைவரியுள்பட) தம்முளே முரணிநிற்பன வென்பதும், இம்முரணுக்குக்காரணம் ஸ்ரீஇராமானுஜன் நாட்டு வரலாற்றையும் இலக்கியத்தையும் வேறுபடுத்தித் தெளிந்திலர் என்பதும், அவர் குறிக்கும் இயற்கைநெறி இலக்கிய நெறி யன்றென்பதும், அவர் எடுத்துரைக்கும் திரு. செ. முதலியாரவர்களின் மொழிகளும், மறைமலையடிகளின் உரையும், பண்டைநாட் புலவர் சிறப்பையும், பின்னாள் தோன்றியவரின் குறையையும் கூறுபவாயினும், ஸ்ரீ இராமானுஜனது இயற்கைநெறியைத் தழுவி வற்புறுத்தில வென்பதும், மறைமலையடிகள் போன்ற ஆராய்ச்சிவல்லோர் மொழிகளை, ஸ்ரீ இராமானுஜன் சொல்வதுபோல், "பொய்மொழி" யாக்க முயன்றிலேன் என்பதும் தெளிவாம்.

(முற்றிற்று)

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

இந்திரப்பிரஸ்தச் சருக்கம்.

288பக்கத் தொடர்ச்சி

நாற்பத்தேழு பாடல்களை கொண்ட இச்சருக்கத்தைப்பற்றி எழுதப் புகுமுன், நாம் முன்னுரையில் கூறிய ஒரு விஷயத்தை இங்கு நமது நேயர்களுக்கு நினைப்பூட்டுவோம். வில்லிபுத்தூரார் மற்றைய கவிகளைப் போல், நாட்டுப்படலம், நகரப் படலமென்று தன் நூலைத் துவக்காமல், தொடங்கியதும் கதையினுள் நுழைந்து சென்றுவிடுகின்றார். அப்படிச் சென்றவர், கதை விரிந்தபின் இந்திரப்பிரஸ்தச் சருக்கத்தில்தான், முதன்முதலில் நகரத்தைப்பற்றி வருணிக்கத் துணிந்தார். வருணனையும் அஸ்தினாபுரியைப்பற்றி யல்லாமல் இந்திரப்பிரஸ்தத்தைப் பற்றியே அமைந்துள்ளதாதலால், கொடுமையே வடிவெடுத்ததுரியோதனன் முதலோர் உறைந்த அஸ்தினாபுரியை ஒப்பனை செய்துகாட்ட அவருக்கு மனமில்லைபோலும்.

அஸ்தினாபுரியில் பாண்டவர்களும் கௌரவர்களும் சிலகாலம் தம்முள் வேறுபாடின்றிக் கலந்துறையும் நாளில், முரசுயர்த்த கோமானுக்கு முடிதனைச்சூட்ட எண்ணித் திருதராஷ்டிரன், மந்திரக்கிழவர் மறைதெரிமுனிவ ரனைவரையும் கூட்டினான். அவர்களும் திரண்டுவந்து தருமனுக்கு மஞ்சனப் புனிதநீ ராட்டினர்.

சுத்தநீர் வியாதன் றௌமியன் முதலோர்
சொரிந்தனர் சோமன்வந் துதித்துச்
சித்திர கிரியி னெடுநிலா வெள்ளஞ்
சீருடன் வழியவார்த் தெனவே

[வியாதன் தௌமியன் முதலிய முனிவர், திங்களானது கிளம்பி அழகான மலையின்மேல் தன் நிலாவெள்ளத்தைச் செம்மையாய் வழியும்படி வார்த்தாற்போற் சுத்தமானநீரை (தருமன்மேல்) வார்த்தார்கள்]

'நிலாவெள்ளம் வழிய வார்த்தெனவே' என்பது நளவெண்பாவிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. புகழேந்தி தன் கடவுள் வணக்கத்தில், சிவபெருமானைப், பரவுமிடத்து'

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
யுலாவு சடைமே லுறையு—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகங்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

என்றனர். நிலாவை வழிய வார்த்தாற்போல் தன் உடம்பு முழுமையும் வெண்ணீ றணிந்தவர் என்று சிவனைக் கூறியிருப்பது காண்க.

துங்க மாமுடி சூட்டிய பின்னர்த் தருமர், ஊர்வலம் வந்து துருபன்முதலிய குரவர்க ளடிபணிந்து தன்

இருக்கையை அடைந்தார். பின், பாண்டவர்கள் ஒரு நாள் பேய்நக ரென்னும்படி மனிதர் இயக்கமில்லாத காண்டவப்பிரஸ்தம் என்னும் கானகத்தையடைந்து அவ்விடத்தில் ஓர் ஊரை நியமிக்க எண்ணினர்கள். இவர்களுடைய எல்லாக் காரியங்களுக்கும் துணையாய் நின்று அவர்கள்கொண்ட எண்ணங்களையெல்லாம் முடித்துவைத்த மாமாயனும், அச்சமயம் இந்திரனை எண்ணுதலும் அவன் ஆங்கு எய்தி, மண்ணிலும் விண்ணிலும் ஒப்பு உயர்வு இல்லாத ஒரு புரத்தைச் சமைக்குமாறு மயனுக்கு ஆணையிட்டான். அவனும் அவ்வாறே யாவரும் புகழ் புரியொன்றைத் தன் வன்மையா லமைத்தான். அந்த நகரமானது, ‘மரகதங் கோமேதகங் துகிர் தாளம் வைரம் வைதூரிய நீலம்' ஆகிய பன்மணிக் குப்பைகளுக் குறைவிடமா யிருந்தது. இம்மரகதம் முதலிய சொற்களை வில்லிபுத்தூரார் அடைமொழியின்றி அடுக்கியிருப்பது நாம் நோக்கத் தக்கது. இவ்வாறு பெயர்ச்சொற்களைக் கவியில், கவியின் யாப்புக் குலையாமலும், சீர் தளை கெடாமலும், அவைகளின் பண்பை விவரிக்கும் உரிச்சொல் முதலிய அடைமொழிகளைச் சேர்க்காமலும் எழுதுவது மிகவும் அருமையான ஒரு செய்கை. இதில் வில்லிபுத்தூரார் பெரிதும் தேர்ந்தவர்.

பார்த்த னருச்சுனன் கரிபோன் விசயன்
பாக சாதனி சவ்விய சாசி பற்குணன்

என்னும் அடியும் இங்கெடுத்துக் காட்டத்தக்கது. இன்னும்பிற அடிகளையும் அங்கங்குக் குறிப்பிட்டுக் காட்டுவோம்.

அம்புலியும் அருக்கனும் ஆகாயத்தில் செல்வதற்கு இடரை விளைக்கத் தக்கனவாய், வானளாவிய மாட மாளிகை கூடகோபுரங்க ளமைந்த அந்த நகருக்கு அதன் பரப்பை நோக்கி, இந்திரன் பெயரால் இந்திரப் பிரஸ்தம் (பிரஸ்தம்-விசாலமான இடம்) என்று இந்திராபதியான கிருஷ்ணனும் பெயரிட்டார்.

இந்நகரில்,வேள்விசெய் வேதியராரவம் ஒருசாரும், நல்லமைச்சர் சொற்களை விழைந்துநிற்கும் மன்னவராரவம் ஒருசாரும், செல்வம் மிகுந்த வைசியர் நிறைந்தகாரணத்தால் எழுந்த பேராரவமொருசாரும், அறுவடை காலத்தில் உழவர் பறையோசைஒருசாரும் பொருந்தி யிருந்தன.

இன்னும், நாடகம்நடிக்கும் நாடகக் கணிகையர் ஒருபாலும், யானை தேர் பரிமா முதலிய வாகனங்கள் ஒருபுறமும், நிறைகுடம் திருவிளக் கொருசிறையும், திருமாலின் திருவடிக்கமலங்களை இடையறாதுநாடித் துதிக்கும் மாதவர் ஓரிடத்திலும், காணப்பட்டார்கள். மலைகளில் அகிலும் சந்தனத்தருவும், அலைகளிலெல்லாம் முத்தும் பவளமும், மருதநிலங்களி லெல்லாம் கரும்பும் புன்னை முதலிய மரங்களும், காணப்பட்டனவாம். ஒரு நீர்நிலையிலிருந்து மற்றொரு நீர்நிலைக்குத் தாவிய வாளைமீன்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து சென்றது, திங்களைக்கொண்ட மாலைப் பொழுதில் ஆகாயத்தின்கண் பரவும் உடுக்களை யொத்திருந்ததாம்.

புரிசையிற் குடுமிதொறு நிரைதொடுத்த
பொற்கொடி யாடையி னிழலைக்
கிரிமிசைப் பறக்குமன்ன மென்றெண்ணிக்
கிடங்கில்வா ழோதிமக் கிளைகள்
விரிசிறைப் பறலின்கடு மையாலெய்தி
மீதெழு மஞ்செனக் கலங்கிப்
பரிசயப் படுதண்சத தளப்பொகுட்டுப்
பார்ப்புறை பள்ளிவிட் டகலா

[மதிலின் உச்சியில் வரிசையாகத் தொடுக்கப்பட்ட அழகிய கொடிகளின் நிழலைக்கண்டு, அகழியில் வாழும் அன்னங்களின் கூட்டங்கள், அந்நிழலை மலையில் வாழும் அன்னங்கள் என்று எண்ணி, சிறகை விரித்துப் பறத்தலின் வேகத்தால் சென்று மதிலின் உச்சியையடைந்து, பின் மேகங்கள் என்று நினைத்து அஞ்சி, மீண்டும் தங்கள் குஞ்சுகளுறையும் தாமரைப் பள்ளியெய்தி அவ்விருக்கையை விட்டகலா]

சிவந்த விசாலமான கண்களையுடைய மடவார்க்கென்று ஏற்படுத்தப்பட்ட, சந்திரகாந்தக் கல்லினலமைந்த செய்குன்றுகளின் சாரலிலிருந்து, இரவில் நிலாவெளிச்சத்தினல் அக்கற்களினின்றோடிய அருவி வெள்ளத்தில் சகோரப்பக்ஷி இன்பமாய்க் குளித்துலாவ, அதனை அன்னச்சேவல் தன் பேடென்றுகருதி நயப்புடன் நெருங்க, அதைக்கண்டு அப்புள் நாணுமாம். எனவே நங்கையரை மகிழ்விக்க ஆடவர்கள் செய்த வேலைப்பாட்டின் திறத்தையும் அதன்பொருட்டு அவர்கள் செலவிட்ட தொகையின் மிகுதியையும் கூறியவா றாயிற்று.

அரிமணிச் சிலையின் சலாகையால்
வட்ட மாகவே யமைத்த சாலகந்தோ
றெரிமணிக் குழைபார் வதன மண்டலத்தி
லெழிலுடன் மிளிருமைத் தடங்கண்
விரிமணிக் கதிரோ னளிக்கமுன்
களிந்த வெற்பிடை வீழுமா நதியின்
புரிமணிச் சுழியிற் றுணையொடு
முலாவிப் பொருவன கயல்களே போலும்

[ஒளியுடைய நீலரத்தினக் கல்லின் சலாகையால் வட்டவடிவமா யமைக்கப்பட்ட சாளரங்கள்தோறும் முகம் வைத்து நோக்கும், பிரகாசிக்கும் காதணிகளையுடைய, அரிவையர் முகத்தில் அழகுடன் ஒளிரும் மையுண்ட கண்கள், மேனுள் சூரியன் பெற களிந்தமலையில் விழும் யமுனாநதியின் வளைந்த கரிய சுழியில் தன் பேடொடும் உலாவும் கயல் மீன்களை ஒத்திருந்தன]

சாளரங்கள் சுழிகளாகவும், கண்கள் கயல் மீன்களாகவும் கொள்ளல் வேண்டும். யமுனை கருநிறமுடையது.

இனத்தினு லுயர்ந்த இந்திர புரியு
மிந்திரப் பிரஸ்தமு மிரண்டும்
தனத்தி னுயர்வாற் கேள்வியா லழகாற்
றக்கதொன் றிபாதெனத் துலைகொண்
மனத்தினு னிறுக்க வுயர்ந்ததொன் றொன்று
மண்மிசை யிருந்து மிகவும்
கனத்தினு லன்றித் தாழுமோ யாருங்
கண்டது கேட்டதன் றிதுவே

[நகரவினத்தைச் சேர்ந்த உயர்வான இந்திரனது ஊரையும் இந்திரப்பிரஸ்தத்தையும், செல்வத்தாலும் கேள்வியாலும், அழகாலும் இவ்விரண்டினுள் எது உயர்ந்ததென்று மனத்தையே துலாக்கோலாகக்கொண்டு சீர்தூக்கிப்பார்க்குமிடத்து, ஒன்று உயர்ந்து வான்மீது செல்லவும் ஒன்று மண்மீதிருக்கவும் நாம் கண்டும், மண்மீது தங்கியது கனத்தாற்றான் தங்கியதெனக் கொள்ளாமல் யாவருங் கண்டதுங் கேட்டதுமில்லாத வழியில் வேறு விதத்தால் கீழிழிந்ததென்று கொள்ளமுடியுமோ!]

இரும்பைச் செம்பொன் ஆக்குவதுபோல் மலையையுங் காட்டையுமொழித்துச் செய்யப்பட்டஅந்நகருக்குத்தோற்று அளகாபுரிவடக்கே ஒளித்ததாம்,துறக்க நாடும் வானி லொளித்ததாம், இலங்கையும் அஞ்சிக் கடலிலொளித்ததாம். அவயவங்களை ஒத்தமலர்களும், மணிகளின் கூட்டமும் நிறைந்து கலந்திருந்ததால், அந்நகர் பூமகள் வடிவை ஓவியமெழுதி அலங்கரித்தது போன்றிருந்தது.

அரவின்வெஞ் சுடிகை கொண்ட
வவிர்மணிச் சோதி மேன்மேல்
விரவிவந் தெறித்துப் பச்சை
மெய்சிவப் பேறிற் றுக
விரவிதன் னிரதம் பூண்ட
வெழுபெயர்ப் பவன வேகப்
புரவியை யையுற் றேகொல்
புரிவலம் புரிவ தம்மா.

[இந்திரப்பிரஸ்தத்திலே பாம்புகளின் வெம்மையான தலையிலுள்ள ஒளிபொருந்திய மாணிக்கங்கள் மிகுதியாய்க் கிடக்க அவைகளின் ஜோதி மேலும் மேலும் பரவிச் சப்தாசுவம் என்னும் தன்னுடைய குதிரையின் பச்சைமேனி சிவப்பேறிப் போயிற்று என்று ஐயங்கொண்டோ சூரியன் ஓரிடத்தில் நிற்காமல் பூமியைச் சுற்றி வலம்வருவது?]

முன்சொன்ன நீலரத்தினக் கல்லினுற் செய்யப்பட்ட சாளரங்களை நோக்கில்,

உருளுடை ஒற்றை நேமி யுறுபரித் தேரோன் சீறத்
தெருளுடைத் திமிரம் போன சின்னெறி போலு
[மென்பார்

[உருண்டையான ஒற்றைச் சக்கரமுடைய தேரிற் பூட்டிய குதிரையோடு செல்லும் இரவி கோபங்கொள்ள அவனுக்கு அஞ்சிச் செறிந்த இருள்கூட்டம் ஓடி ஒளித்த ஓர் சிறுவழி இதுவேபோலும்]

என்று மன்பதை ஐயுற்று நிற்கும். போருக்குரிய பொறிகளைத் தன்னகத்தே கொண்ட மதிலின்மேல் அசையும் கொடிகள், அந்நகரத்தைக் காவல் செய்யும் தெய்வம், இந்திரபுரியோடு அமர்புரிய அந்நகரைத் தன்கைகளால் அழைப்பது போன்றிருந்தன. நான்கு திக்குகளிலும் எழுகின்ற அகிற்றூப முதலிய புகைகள் மேகங்களையொத்து எங்கும் திரண்டு செல்லுதல், ஏழு மேகங்கள் தவிர முகிற்குலம் இன்னும்பல வுண்டோ என்று எண்ணும்படி யிருந்தது.

துதையளி முரலும் வாசச்
சோலையின் பொங்கர் தோறும்
விதமுற வெழுந்து காள
மேகங்கள் படித ஞேக்கிக்
கதிர்மணி யகழி மாமே
கலையுடை நகர மாதின்
புகைநறு மலர்மென் கூந்தல்
போலுமா காண்மி னென்பார்.

[நெருங்கிய வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் சோலையிலுள்ள கொம்புகள் தோறும் விதம்விதமாய்ப் புயற்கூட்டங்கள் படிதலைக்கண்டு ஒளிபொருந்திய மணிகளையுடைய அகழியையே மேகலையா யுடுத்த நகரமாதின் அகிற் புகையூட்டிய நறுமலர்களைக் கொண்ட கூந்தல்போன் றிருக்கின்றது காண்மினென்பார்]

வான்றோய் மரங்களின் கிளையிற் றங்கும் முகிற்குலம், அகழியையே மேகலையாகவுடைய நகரமாதின் கூந்தலை யொத்திருந்தது கூந்தல் நீண்டிருப்பதால் நீளமாகிய கிளையிற்றங்கிய மேகங்கள் என்றார். அங்கு மணியையும் பொன்னையு மிழைத்து அழகுபெற வமைத்த கோபுரங்கள்மிக்க மதிற்சுவர்களைக் கண்டு மனிதர், நகரமென்னுங் குலக்கொடி தன் மணத்திற்காகச் சூடிய நெற்றிப் பட்டங்கள்போன் றிருந்தன வென்பார்.

பணையினம் பலவு மார்ப்பப்
பைங்கொடி நிரைத்த செல்வத்
துணைமணி மாட மன்னுந்
தோரண வீதி யாவும்
புணைவன நெருங்க நீடிப்
பொழிபுயல் கிழிக்குஞ் சார
லிணைவரை நடுவட் போதும்
யாறுபோ லிலங்கு மென்பார்,

[பற்பலவகையான வாத்தியங்கள் முழங்கப் பசுமையான கொடிகள் வரிசையாய் நிறுத்தப்பட்ட தம்முளொத்த ஒரே பருமனையுடைய மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடங்கள் நிறைந்த தோரணங்கள்கட்டிய வீதிகளெல்லாம், மூங்கிற்காடு செறிந்து உயர வளர்ந்து மேகங்களை முட்டும் சாரலையுடைய இருபுற மாடங்களாகிய மலைகள் நடுவிற் போகும் ஆறுபோல் பொலியும்]

இரண்டு புறமும் அமைந்துள்ள மாடங்கள் இணைவரையாயின. அம்மாடங்களிலுள்ள கொடிகள் மலைச்சாரலிலுள்ள மூங்கிற்காடுக ளாயின. புயல் கிழிக்குஞ்சாரல் என்றது மாடங்களின் உயர்வைக் காட்டி நின்றது. வீதி ஆற்றிற்குவமை நீளத்தாலும் செல்லும் ஒழுங்கினுலும் உவமை கொள்ளவேண்டும்.

முடிசூட்டல் முடிந்தபின்பு யாவருக்கும் தருமர் விடைகொடுத் தனுப்பினர். பிறகு அங்கே நாரதர் வந்து தோன்றினர். அவருக்குச் செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகளை ஐவரும் செய்து அவரை வரவேற்றார்கள். ‘சரிகம பதநிப் பாடற்றண்டு தைவரு செங்கையோன்', சுந்தோப சுந்தரென்னும் அசுரர் திலோத்தமையைக் கண்டு விரும்பி அவள்பொருட்டுச் சண்டையிட்டு இறந்ததைக் கூறி, அவ்வாறே பெண்ணால் வரும் கேடுகளைத் தடுக்க, ஐவரை மணந்ததால் குறையாத வரமிகு கற்பினையுடைய திரௌபதியை அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோராண்டு வைத்து வாழவேண்டு மென்றும், அப்படி வாழுங்காலத்தில் மற்றவர் அவளைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாதென்றும், அப்படிக் காணில் அத்தவறுக்குச் சாந்தியாக, கண்டவர் ஊரைவிட்டு நீங்கிப் புண்ணியத் துறைகளாடித் திரும்பவேண்டு மென்றும் பணித்தார். முனிசொன்ன நாள்தொடங்கி ஐவரும் அவ்வாறே அன்னவளை வேட்ட முறைப்படி அடைந்து வாழ ஆரம்பித்தனர்.

தனவணிகர் நாட்டிலிருக்கும் எமது நண்பர்களுக்குச் சென்ற ஆண்டு பைண்டு வால்யூம் தேவையாயிருக்குமாயின் அவர், விளம்பரவிலைக்குக் கோத்தமங்கலம் ஸ்ரீமான் இராமசுப்ரமணியம் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்.

அப்பர்

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

10. அப்பர் திருவையாற்றினின்று பாண்டியநாட்டுக் கேகல்

(திருநெய்த்தானம்—திருமழபாடி பதிகங்கள் முதலியன)

306 பக்கத் தொடர்ச்சி.

திருவையாற்றில் பலநாள் அப்பர் வீற்றிருந்து பல பதிகங்களும் திருப்பணிகளும் செய்த பின்னர், தென்னாட்டிலுள்ள பரமனார்கோயில்கள் மற்றவைகளைக் காண அவாவுற்றவராய்ப் புறப்படலானார். திருவையாற்றுக்கு மேற்கே ஒருமைலிலுள்ள திருநெய்த்தானமென்னும் திருப்பதிக்குச்சென்றனர். இது அக்காலத்தில் மிகவும் சிறந்த சிவஸ்தலமாம். இப்பதியை * அடையாதவர் அமருலகம் அடையாரென்றும், உமையுடன் நெய்யாடிய பெருமானிடமென்றும் † சம்பந்தர் புகழ்ந்திருக்கின்றார். அப்பரும் "மாலொருபாகமாக (சிவபெருமான்) மகிழ்ந்த நெய்த்தானம்" என்றார் ‡.

இப்பதியில் அப்பர் பாடிய பதிகங்கள் ஐந்து $ திருமுறைகளிற் காணலாம். அவையாவன, பத்து பாசுரங்களமைந்த திருநேரிசை-1, அத்தகைய திருவிருத்தம்-1, திருக்குறுந்தொகை-1, திருத்தாண்டகங்கள்-2, ஆக 50 பாசுரங்கள் உள.

இப்பதிகங்கள் நமது நூதன நாகரிகங்களினும் முந்தி நிற்கும் இலக்கண அமைவுடன் காணப்படும். ¶ விதியொன்று இருக்கிறது என்று எண்ணவேண்டா. முயற்சியுடையார்க்கு அவ்வெண்ணம் மனதினின்று நீங்கல்வேண்டும். ஆயினும் உலோகாயதச் செய்கைகளைக் கைவிடல் வேண்டும். நமது யாக்கை தினைத்தனையோர் பொறையிலா வுயிரைக்கொண்டது, நிரந்தரமாய இன்பம் வேண்டின் † திருநெய்த்தானம் நினைந்துய்யலாம் என்னும்இத்தகைய நீதிகள்புகட்டும்.

இப்பதிகங்களுள் திருநேரிசை, திருநெய்த்தானனார் * வந்திப்பார் வாயிலும் சிந்திப்பார் சிந்தையிலு முள்ளார் என்னும் கருத்தைப் பலவிதமாக வெளிப்படுத்தும். $ திருவிருத்தம், அவர் மனிதருக்கும் தேவர்களுக்கும் உற்ற துன்பங்கள் நீக்கும் தொழிலுடையவரென்னும் கருத்தமைந்தது. திருக்குறுந்தொகை, நெய்த்தானனைத் தொழுவார் சுடர்வாணர், கொடிவாணர், வலிவாணர் தலைவாணர், இன்பவாணர், உம்பர்வாணர் ஆவாரென்றும், அவர் வினை விடுமென்றும் விவரிக்கும். முதல் திருத்தாண்டகம், யாவையுமாம் சிவலோகன் ‡ அப்பர் நெஞ்சுள் நிற்கும் தம்மையை விவரிக்கும். இரண்டாம் திருத்தாண்டகம், உடல் வாழ்க்கையை மெய்யென்றெண்ணி மாந்தர் வினையில் கிடந் தழுந்துவதைக் கண்டித்து ஏசும்.

இப்பதிகங்களையும் திருவையாற்றுப் பதிகங்யும் ஒன்றாய் வாசிப்பதின் பயன் சிறப்பாம்.

திருநெய்த்தானத்தை அப்பர் நீங்கிய பின்னர் அப்பதியிலிருந்து வடமேற்கேசுமார் 3½ மைலில் கொள்ளிடம் மேற்கரையில் (ஆற்றுக்குப் பரிசு) விளங்கும் திருமழபாடி என்னும் நகருக்கு வந்தனர். இப்பதியில் இவர் பாடிய திருத்தாண்டகங்களிரண்டு தேவாரத்தில் உள. அவற்றுள் ஒன்று, சிவ சொரூபத்தை

* விடையார்கொடி யுடையவ்வணல் வீந்தார் வெளேயெ
உடையார்நறு மாலைசடை யுடையாரவர் மேய [லும்பும்
புடையேபுனல்பாயும்வயல் பொழில்சூழ்ந்தநெய்த்தானம்
அடையாதவ ரென்றும்மம ருலகம் மடையாரே.
சம்பந்தர்—6

† மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிட நெய்த்தான மெனீரே.
ஷை—1

‡ காலதிற் கழல்க ளார்ப்பக் கனலெரி கையில் வீசி
ஞாலமும் குழிய நின்று நட்டம தாடு கின்ற
மேலவர் முகடு தோய விரிசடை திசைகள் பாய
மாலொரு பாக மாக மகிழ்ந்தநெய்த் தான னாரே.
அப்பர்-திருநெய்த்தானம்-திருநேரிசை-7

$ இப்பதியில் சம்பந்தர் பதிகம் ஒன்றே; சுந்தரமூர்த்தி நாயனார் பாடல் ஒன்றுமில்லை.

¶ ஈண்டா விரும்பிறவி துறவா வாக்கை
இதுநீங் கலாம்விதியுண் டென்று சொல்ல
வேண்டாவே நெஞ்சமே விளம்பக் கேணீ
விண்ணவர்தம் பெருமானார் மண்ணி லென்னை
ஆண்டானன் றருவரையாற் புரமூன் றெய்த
வம்மானை யரியயனுங் காணா வண்ணம்
நீண்டா னுறைதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.
—திருநெய்த்தானம்-திருத்தாண்டகம் 2.

† அஞ்சப் புலனிவற்றா லாட்ட வாட்டுண்
டருநோய்க் கிடமாய வுடலின் றன்மை
தஞ்ச மெனக்கருதித் தாழே னெஞ்சே
தாழக் கருதுதியே தன்னைச் சேரா
வஞ்ச மனத்தவர்கள் காண வொண்ணா
மணிகண்டன் வானவர்தம் பிரானென் றேத்தும்
நெஞ்சர்க் கினியவன் நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. ஷை-8

* பந்தித்த சடையின்மேலே பாய்புன லதனை வைத்து
அந்திப்போ தனலு மாடி யடிகளை யாறு புக்கார்
வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயினுள்ளார்
சிந்திப்பார் சிந்தை யுள்ளார் திருந்துநெய்த் தானனாரே.
—திருநெய்த்தானம்-திருநேரிசை 8

$ கொன்றடைந்தாடிக் குமைத்திடுங் கூற்றமொன்னார் மதி [ல்மேல்
சென்றடைந்தாடிப் பொருததுந் தேசமெலாந் தெரியும்
குன்றடைந்தாடும் குளிர்பொழிற் காவிரியின் கரைமேல்
சென்றடைந்தார் வினைதீர்க்கு நெய்த்தானத் திருந்தவனே.
திருநெய்த்தானம்-திருவிருத்தம் 3.

‡ அல்லாய்ப் பகலானாய் நீயே யென்றும்
ஆதிக் கயிலாய னீயே யென்றும்
கல்லா லமர்ந்தாய் நீயே யென்றும்
கானத்திக் கற்பகமும் நீயே யென்றும்
சொல்லாய்ப் பொருளானாய் நீயே யென்றும்
சோற்றுத் துறையுறைவாய் நீயே யென்றும்
செல்வாய்த் திருவானாய் நீயே யென்று
நின்றநெய்த் தானாவென் னெஞ்சு ளாயே.
—திருநெய்த்தானம்-திருத்தாண்டகம்3.

வர்ணிக்கும் *. மற்றொன்று (ஏழு பாசுரங்களே வான்மீகத்தில் தப்பியவை) "மழபாடி வைரத்தூண்", அப்பரை நையவைத்த காரணங்கள் காட்டும் †. இவ்விரண்டு திருத்தாண்டகங்களிலும் உள்ள பாசுரங்களின் தொகை 17.

இப்பதியினின்று கிழக்கே 1½ மைலில்உள்ள திருப்பூந்துருத்திக்கு அப்பர் திருமழபாடியினின்று சென்றனர். அங்கு ஒரு திருவிருத்தப் பதிகமும் ஒரு திருத்தாண்டகப் பதிகமும் ஒரு திருக்குறுந்தொகையும் திருவாய்மலர்ந்தருளினர். திருத்தாண்டகம் 'பொய்யிலியைக் கண்டேன்" ¶ என்றும், திருக்குறுந்தொகை "மேவிய காதல் விளைப்ப விருப்போம் திருவடிக்கீழ்" என்றும். "அங்குறையுந் தன்மை வேண்டி அடிபோற்றுவது" எனத் திருவிருத்தமும் பாடப்பெற்றன. இவ்விடத்திலேயே பல்வகைத் திருத்தாண்டகங்களும், தனித்தாண்டகமும், அடைவுத் திருத்தாண்டகமும், திருவங்கமாலையும் பாடப்பெற்றதெனச் சேக்கிழார் கூறுவர்.‡

11. திருப்பூந்துருத்தியில் சம்பந்தரை கண்டது.

திருப்பூந் துருத்தியில் அப்பர் சிலகாலம் திருத்தொண்டு செய்துவந்தபோது திருமடம் ஒன்று அவ்வூரில் கட்டிவைத்தனர். இவ்விடத்திலிருக்கும் நாளில் மதுரையில் சமணரை வாதில்வென்று மீளும் திருஞானசம்பந்தர் அப்பர் திருப்பூந்துருத்தியி லிருப்பதுகேட்டு அவரைக்காண அங்குவரலானார். அப்பர் காழியர்கோன் வருகைகேட்டு எதிர்சென்று அடியார் குழாம் நெருக்கத்தில் கலந்து சம்பந்தரது முத்துப் பல்லக்கைச் சுமக்கும் ஆள்களுடன் தாமும் அதைச் சுமந்து சென்றனர். திருப்பூந்துருத்தி சமீபித்ததும், ஆளுடைய பிள்ளையார் அப்பர் எங்குற்றாரென அருகில் நின்றவர்களை வினவ, அப்பர் "அடியேனும் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்கு உற்றேன்" என்றனர். இதுகேட்ட சம்பந்தர் மனம் பதைத்துச் சிவிகைவிட் டிழிந்து அப்பரை வணங்க, அப்பரும் அவரை வணங்கினர். தொண்டர்கள் "அரோ ஹரா" என ஆர்த்தனர்.

கழுமலத்தரசும் திருநாவுக்கரசும் சிலநாள் திருப்பூந்துருத்தியில் * மானேந்து கரத்தாரைத் துதித்து மருவியிருந்தனரெனப் பெரியபுராணம் கூறும். ஆயினும் இத்தலத்தில் திருஞானசம்சந்தர் பாடிய பதிகங்கள் திருமுறையி லகப்படவில்லை. அவை வான்மீகம் கொண்டாற்போலும்.

வாகீசர் காழியர்கோனிடம் பாண்டிமாதேவியார் பண்பும், குலச்சிறைநாயனார் பெருமையும் அறிந்தவராய்த் தானும் செந்தமிழ்நாடாகிய பாண்டிநாட்டுக்குச்செல்ல விருப்புற்றனர். பிரமபுரத் திருமுனிவரும் தொண்டை நன்னாட்டுக்கு ஏக விடைபெற்றனர். அப்பரும் தென்னாட்டுக்குச்செல்லப் பூந்துருத்தியை விட்டனர்.

* நீராகி நெடுவரைக ளானான் கண்டாய்
நிழலாகி நீள்விசும்பு மானான் கண்டாய்
பாராகிப் பௌவமே ழானான் கண்டாய்
பகலாகி வானாகி நின்றான் கண்டாய்
ஆரேனுந் தன்னடியார்க் கன்பன் கண்டாய்
அணுவாகி ஆதியாய் நின்றான் கண்டாய்
வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் தானே.
திருமழபாடி-திருத்தாண்டகம் 7.

† ஊனிகந் தூணுறிகையர் குண்டர் பொல்லா
வூத்தைவாய்ச் சமணருற வாகக் கொண்டு
ஞானகஞ் சேர்ந்துள்ள வயிரத்தை நண்ணா
நாயேனைப் பொருளாக வாண்டு கொண்ட
மீனகஞ்சேர் வென்னநீர் விதியாற் சூடும்
வேந்தனை விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே
என்றென்றே நானரற்றி நைகின் றேனே.
திருமழபாடி-திருத்தாண்டகம் 4

¶ ஆண்டானை வானோ ருலக மெல்லாம்
அந்நா ளறியாத தக்கன் வேள்வி
மீண்டானை விண்ணவர்க ளோடுங் கூடி
விரைமலர்மேல் நான்முகனு மாலுந் தேட
நீண்டானை நெருப்புருவ மானான் றன்னை
நிலையிலார் மும்மதிலும் வேவ வில்லைப்
பூண்டானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்தி கண்டேன் நானே.
—திருப்பூந்துருத்தி-திருத்தாண்டகம் 9.

‡ இவற்றுள் திருவங்கமாலை முதலியன இப்பதியில் அப்பர் இக்காலத்தில் பாடியதென்பது ஆமோதிக்கலாகுமோ என்பதன் ஆராய்ச்சி பின் அத்தியாயங்களிற் காண்க.

* மறியுடையான் மழுவாளினன் மாமலை மங்கையோர்பால்
குறியுடையான் குணமொன் றறிந்தாரில்லை கூறியவன்
பொறியுடைவா ளரவத்தவன் பூந்துருத்தி யுறையும்
அறிவுடையாதி புராணனை நாமடி போற்றுவதே.
திருப்பூந்துருத்தி-திருவிருத்தம் 2.

189052

மதிப்புரை

அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி.

நம் நாட்டின்கண் சமயப்பற்றுடையவர்களாவோர் யாவுமா யெங்குமாய் நிற்பதன்றி அவாவர் மனத்துள்ளும் விளங்குகின்ற ஜோதிக்கொழுந்தாகிய பரம்பொருளைச் சிற்சில ரூபகுண பேதங்களமைத்து ஆராதித்து வருகின்றனர். அரவணியும் அதனுடையு மணிந்து பித்தனைப் தலையோட்டி லிரப்போனும், இடுகாடு புக்குத்தன் அக்குமாலை அசையவசைய நடமாடுவோனுமாய வொரு நீறுபூத்த அனற்பிழம்பை நினைத்து நினைத்து நெஞ்சம் நெக்குருகுவார் சைவர். கதிரிமைக்கும் மணியணி யாரங்களமைந்து பொற்றில்இடைதிகழப் பாற்கடல்அனந்தன்மிசை அறிதுயிலமர்ந்த கருமுகிற் கொழுந்தை வழுத்துவார் வைணவர். வறுமையிற் செம்மைசேர் பரமன்காண் எமதண்ணல் என்ன நின்றனன் சிவன். செல்வத்திற் சீருடையான் எம்மிறை,யென்ன அமர்ந்தனன் திருமால். இனி இளமையிற் கருணையோன் எம் வள்ளல் என்ன அறுமுகக் குழகனை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு ஆராதனை புரிவார் ஒரு சாரார்.

இவ்வாறு வேறுபடுத்திக் கூறினேமாயினும், இத் தமிழ்நாட்டின்கண் ஒருசிறு பகுதியோர் தவிர ஏனை மாந்தருள் பெருந் தொகுதியோர், கயிலைநாதனையும் அரங்கேசனையும் குமரவேளையும் ஒருங்கே ஒருபடித்தாய், இம்முப்பெரும் முதல்வரையும், "அடியேமை உய்யக்காண்" என உள்ளாரத் துதித்து வணங்கி வழிபடுவாராகின்றனர். இவ்வண்ணம் வழிபடுமவர்களுக்கு மனத்தினிடத்தில் பக்தி முதிர்ந்திருப்பதே முக்கியமாயினும் வாயாரப்பாடி ஏத்துதற்குரிய தோத்திரப் பாடல்களும் வேண்டும். அன்னார் மனம் வரவர மேன்மையடைவது அவர் மனனம் செய்து பயில்கின்ற துதிநூல்களைப் பொருந்தியதாக இருக்கின்றது. ஏனெனில், கோயிலுந் தலமும் நடந்து கடவுளைத் தொழுவோர்களிற் பலர்,நோய் வறுமை முதலிய இம்மைக்குரிய தமது குறைகளைத் தீர்க்கும்வண்ணமே வேண்டுகின்றவர்க ளாகின்றனர். இதனோடு நின்றுவிட்டால் அவர்களது வாழ்நாள் அறியாமை யென்னும் இருளிலேயே கரைந்தழிகின்றது. இவ்வாறன்றி அவர் தேவாரம் திருவாய்மொழிபோன்ற ஆன்றோர் சொற்களால் கடவுளை வழிபடக் கற்பாராயின், தமக்காகக் கடவுளைத் தொழுகின்ற தன்மையிலிருந்து மெள்ளமெள்ள மாறிக் கடவுளிற்காகவே கடவுளைத் தொழுகின்ற உத்தமர்களாவார்.

சைவர்க்குத் தேவாரமும், வைணவர்க்குத் திருவாய்மொழியும் இருப்பதுபோல் குமரக்கடவுளை வழிபடுவோர்க்கும் பலநூல்கள் இருக்கின்றனவென்பது பிரசித்தம்.

அன்னவைகளுள், இப்பொழுது நமது பார்வைக்கு அனுப்பப்பெற் றிருக்கின்ற, ஆறெழுத்தந்தாதி என்பது ஒன்று. இது, கட்டளைக் கலித்துறைச் செய்யுள்கள் நூற்றிரண்டு அந்தாதியாய்க் கொண்டு, அறுமுகக் கடவுளிற்குரிய ஷடாக்ஷர மந்திரத்தின் பிரபாவத்தைப் பாவுகின்றது. ஞானம் பக்தி யோகம் முதலியவைகளின் அரிய இரகசியங்கள் ஆங்காங்கு இந்நூலின்கண் அமைந்திருப்பதுடன் குமரக் கடவுளினிடத்தில் நமது மனத்தைக் கொண்டுபோய்க் கட்டுவிக்கும் நலமும் இப்பாடல்களில் இருக்கின்ற தென்பதற்கு ஐயமில்லை.

ஆறு முகத்தம்மை வேலாயி னின்னெழுத் தாறுமுரு
வேறு முகத்திற் கிலக்கோர் முகமில்லை வெவ்வினையைச்
சீறு முகத்தி குமாரயி யன்பர்சிந் தித்துவினைப் [யே
பேறு மளித்தவர்க் குள்ளெழுத் தாந்திரப் பெண்கொடி

என்பதுபோல் இந்நூலில் காணப்படும் பல செய்யுள்கள், ஓதுவோர்க்குத் தத்துவ உணர்வு உறுத்துவதுமல்லாமல், அவர் மனத்தை அன்பின் திறத்தினல் கசியவும் வைத்து,

ஒன்றே முருகனின் னாறெழுத் தோசை யுலகமெலாம்
நின்றே பலபொரு ணீயென்று நானென்று நீதிவெவ்வே
றன்றே சமயங் களீராறு மாய்நின்ற வானந்தநீ
யென்றே தெளிந்தவர்க் கேகன்ம மாயை யிருளறுமே.

என்ற சமரச நன்னிலை யளித்து முத்திக்கு நெறிகாட்டும் பெருமையும் உடையன.

இந்நூலினை ஆக்கியோர் இவரென்பது ஐயத்திற்கிடமானதே. அகத்திய முனிவரே யாத்தனர் என்பார் சிலர். செய்யுள் நடையை நோக்குங்கால் அற்றன்று என்று மறுப்பார் சிலர். இப்பதிப்பிற்கு முன்னுரை எழுதியளித்திருக்கின்ற, பவானி எக்ஸைஸ் ஸப் இன்ஸ்பெக்டர் திருவாளர் P. இரத்தின சபாபதி பிள்ளையவர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து,

> "தமிழறிவு சிறிதே படைக்கப்பெற்று ஆறெழுத்தில் பக்தியும் பெற்ற ஒருவர்தாம் இவ்வந்தாதியைப் பாடித் தம் நூலுக்குப் பெரும் பெருமையுண்டாகும் என்று எண்ணங்கொண்டு அகஸ்தியர் பாடியதாகவும் கூறியிருக்கலாம். அல்லது, அகத்தியரிடத்தும் ஆறெழுத்திற்குரியோனாகிய குமரனிடத்தும் பக்தி நிறையப்பெற்றும் தமிழிலக்கண ஞானம் பெரிதும் பெறுதவரான ஒருவர் தம் பக்திமேலீட்டால் அகஸ்தியர் கிருபை தம்மிடம்அதிகம் விளங்கிய காரணத்தினல், அகத்தியர் பேராலேயே இந்நூலை வெளியிட்டிருப்பினுமிருக்கலாம்.........அல்லது, அகத்தியர் பக்தி மேலிட்ட ஒருவர் மனமும் புத்தியுஞ் சிலகாலமாவது அகஸ்தியரின் உயர்மனம் புத்தியின் அருகே நெருங்கவும் நெருங்கலாம். இதுவும் இயற்கைக்குள் அடங்கியதோ யாதும்"

என எடுத்துக்காட்டும் வண்ணம், இந்நூலிற்கு அகத்தியர் ஆசிரியரென வழங்குவது பல காரணங்கால் நேர்ந்திருத்தல் கூடும்.

நூலின்தன்மை இன்னதாக, அதனை நயமுறப் பதிப்பித்த, பென்ஷன். டாக்டர் ஸ்ரீமான் வி. எஸ். அருணசலம்பிள்ளை அவர்களின்முயற்சியைப்பெரிதும் பாராட்டுகின்றோம். தமிழில் பயிற்சியுள்ளோர்க்கும் பொருள் விளங்குவது அருமையாகும்படி சில செய்யுள்கள் இந்நூலின்கண் உள. இவர் ஒவ்வொரு செய்யுளையும் நன்கு பொருளாய்ந்து, பதவுரை பொழிப்புரை விரிவுரை முதலியன மிகவும் தெளிவாய் வரைந்துள்ளார். செய்யுள்களில் அடங்கிய சில அரிய விஷயங்களைக் கந்தரனுபூதி, தாயுமானவர், அருணகிரியார், ஸத்லபுராணங்கள், பகவத்கீதை, உபநிடதங்கள் முதலிய நூல்களினின்று எடுத்துக்காட்டிய மேற்கோள்களால் நன்கு விளக்கியிருக்கின்றார். இவருடைய உரையோடு கூடிய இந்நூல் அருமையாய்ப் பதிப்பிக்கப் பெற்றுளது. இதனை ஓதுவோர் தத்துவ அறிவு தெளிவடையும். யாவரும் படித்தல் நலம். விலை. 0—12—0. கிடைக்குமிடம் :—

V. S. அருணசலம் பிள்ளையவர்கள்,
குமாரபாளையம், பவானி.

மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினங்கு தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தொகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயலாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்களோ, யாதோ ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினல் நலமாம். அல்லது இப்பொழுது அனுப்ப இயலாத இக்ஷத்தில் எப்பொழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் பரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

12. கார்முகப் படலம்

வம்பு முளது கம்பர் திறத்தில்.

சுவைக்கச்சுவைக்கக் கோசிகன்பேசிய உரையினைச் செவிமடுத்த சனகர்வேந்தன் உள்ளத்தை உயக்கமும் ஊக்கமும்நின் றாசலாட்ட,

மாற்றம்யா துரைப்பது மாய விற்குநான்
தோற்றவா றெனமனந் துளங்கு கின்றதால்
நோற்றன ணங்கையு நொய்தி னையன்வி
லேற்றுமே லிடர்க்கட லேற்று மென்றனன்.

["யான் என்னசொல்லக் கிடக்கின்றது. இவ்விராமனை என் திருமருகனுய் எய்தப்பெறுவகை இடைநிற்கும் அம்மாய வில்லால் யான் தோற்றவனாகின்றேனே யென்று என்மனம் நடுங்குகின்றது. ஒருகால் இவ்விளவல் அவ்வில்லிற்கு நாணேற்றி விடுவானுயின், என் மகளும் தவம் பெரிதுடையவ ளாவாள், நானும் துயரக்கடல்நின்று கரையேறினவ னாவேன்"]

என்றுரைத்து, அக்கார்முகத்தை மண்டபத்தகவயின் கொணரப் பணித்தனன். கோதண்டசாலையிலிருந்து அளவில் ஆற்றலர் அறுபதினயிர ஆட்கள் இடையிடைத் தண்டிற்றூங்கி அம்மாயவில்லினைச் சுமந்து வந்தனர். அந்தக்காலை அதனை வீதியின்கண் கண்ணுற்ற நகரமாக்கள் வியந்தனராய்ச் சூழ்ந்துவரத் தம்முளே பலபட மொழியலாயதைக் கம்பர் அருகிருந்து கேட்டவர்போல் கூறுகின்றனர். "சங்குசக்கரதாரியாகிய திருமாலே வந்தாலன்றி இவ்வில்லைத்தீண்டுதற்கும் தகுந்தவன் வேறு யாரிருக்கிறான். பின் ஏன் இம்மன்னவன் வீணே இதனை எடுத்துவரச் செய்கின்றான்." என்பார் சிலர். அதற்கு, அயலிருந்தோர் சிலர் "யாராயிருப்பினும் நா ணேற்றிவிடுவானயின் நம் சீதையின் திருமணம் வாழும்" என எதிருரைப்பார். "மேருமலையேயாகிய இதற்கு வில்லென்று பேர் வைத்ததே பெருமோசம்" என்பான் ஒருவன். "யாரடா இவ்வில்லிலே நாண்பூட்டி முன் அம்பு எய்தான்" என்பான் இன்னொருவன். "அன்று கடல் கடைந்த மந்தரகிரியன்றோ இது" என்பதனின் முன் அயலொருவன் "அம்மத்தை இழுத்த வாசுகியே இதன் நாண் ஆகும்" என்பான். "வானவில்லே தரையில் வீழ்ந்தது" என்பார் சிலர். "இதனைக் கொணர்வித்த இம்மன்னவன் கருத்தென்ன" என்று ஒருவன் மெல்லெனச்சொல்லிப் பரிகசித்ததை "இச்சனகனைப்போல் மன்னவர் உளர்கொலோ மதிகெட்டார்" என்று இன்னொருவன் வாய்விட்டு இயம்பத் தாழ்ந்திலன். அதற்குள் நெருங்கிநின்ற ஒருவன், "தோள்வலியால் இதை வளைப்பதென்பது ஒருவராலும்இயலாதாயினும்,ஊழ்வினையினல் ஒருகால் எதிர்ந்தவனொருவன் நாணேற்றிடினும் இடலாம், யாரறிவர்" என்ற சில முதுக்குறைவு கூறினன். அதுகேட்ட சிலர், "ஆயின் சானகியும் ஒருநாள் இவ்வில்லை நாணேற்றக் காணலாகுமோ"வென உள்ளந் தேறினர். வில்லினது வன்மையை மதித்த ஒருவன், "இத்தகைய வில்லினின்று எய்த அம்பிற்கு இலக்காக அமையக்கூடியதொன்று எங்குளது" என வியப்ப அயலொருவன், ஊருக்கெல்லாம் அருமையாயிருந்த சீதைக்கு இன்னும் விவாகமாகவில்லையே என்று வருந்தி, அவ்வா றாகாததற்குச் சனகன் அவளை இவ்வில்லின் சுல்கமாயமைத்ததே காரணமெனச்சினந்து,தன்மகள்மீது ஆசையென்பது சிறிதேனுமவனுக்கிருக்குமாயின் அவளுக்குத் திருமணம் நேராதபடி இக்கார்முகத்தைக் குறுக்கே கிடத்துவானே என ஊகித்தவனுய் "நமது அரசன் ஆசையிலாத் தன் மகளின்மேலே அவ்வம்பை நாட்டவைப்பான் ; இது கேட்பானேன்" என்று இளிவரப் பேசினன். இன்னொருவன், "நெடுமாலே வந்துளனென்றாலும் இவ்வில்லை எடுப்பான் என்பது நிச்சயமோ !" என்னுங்கால், மற்றொருவன், "அவனுமே எடுக்கானயின், அவன்மகன் பிரம்மன் செய்தமைத்த தீத்தொழிலின் உருவம் இவ்வில்" என் இவ்வில்லினை ஆதியில் ஆக்கிய நான்முகனையும் பழிப்பவனயினன். இவன் இவ்வாறு சீதையைக்கருதிப் பிரம்மனையே தீயவன் எனப் பழித்தானனலும், முன்னொருவன் அவ்வில்லின் திண்மையை மாத்திரம் மதித்துப் புகழ்கையில், "இதனை அத்திசைமுகன் தீண்டியன்று செய்தது. தன் மொய்தவப் பெருமையாலேயே செய்திருத்தல் வேண்டு" மெனப் பாராட்டியுமுளன். இக்கருத்துக்களைத் தம்முட் கொண்டு வந்துள,

சங்கொடு சக்கரந் தரித்த செங்கையான்
சிங்கவே றல்லனே லிதனைத் தீண்டுவான்
எங்குள னொருவனின் றேற்றி னிச்சிலை
மங்கைதன் றிருமணம் வாழுமா லென்பார்.
கைதவந் தனுவெனல் கனகக் குன்றென்பார்
எய்தவன் யாவனே யேற்றிப் பண்டென்பார்
செய்ததத் திசைமுகன் றீண்டி யன்றுதன்
மொய்தவப் பெருமையின் முயற்சி யாலென்பார்.
திண்ணெடு மேருவைத் திரட்டிற் றோவென்பார்
வண்ணவான் கடல்பண்டு கடைந்த மத்தென்பார்
அண்ணல்வா ளரவினுக் கரசனே வென்பார்
விண்ணிடு நெடியவில் வீழ்ந்த தோவென்பார்.
என்னிது கொணர்கென விளம்பின னென்பார்
மன்னவ ருளர்கொலோ மதிகெட்டா ரென்பார்
முன்னையூழ் வினையினன் முடிக்கிலா மென்பார்
கன்னியு மிச்சிலை காணுமோ வென்பார்.
இச்சிலை யுதைத்தகோற் கிலக்கம் யாதென்பார்
நச்சிலை நங்கைமே னாட்டும் வேந்தென்பார்
நிச்சய மெடுக்குங்கொ னேமி யானென்பார்
சிற்சிலர் விதிசெய்த தீமை தானென்பார்.

இச்செய்யுளிற் சிற்சில அடிகளுக்கு வேறு ஒன்றிரண்டு பொருள்கள் உரைக்க இயலுமாயினும், வில்லினைச் சூழ்ந்துவந்த நகரவாசிகளுள் அவரவர் தம் வரையில் தனித்தனியாய்க் கூறிவிட் டகலாமல் ஒருவர் சொன்னதைத் தொடுத்து மற்றொருவர் கூறுவதாகக் கொள்வதே இந்நிலைக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்றதென நினைத்து அதற்கிணங்க ஈண்டுப் பொருள் காணலாயிற்று.

பொதுஜன மனத்தின் போக்கையும் மானுடத் தன்மையின் நுண்மையும் பல இம்மிதிலையின் மாந்தர் தம் மொழிகளுள் காணலாம். வெளித்தோற்றமும் அனுபவமும் அறிவும் யாவும் ஒன்றினை ஒருதிறங் குறிக்க, உள்ளுணர்வு (Instinct) இன்னவைகள் எல்லைகளுக்கு ளடங்காத உண்மைநிலையை எதிருற

எய்துவிக்கும். பாற்கடல் துயில்தரு பண்ணவன் தபரதன் மதலையாய்வந் தவதரித்தநாள் அயோத்திமா நகரவாசிகள், ஆர்த்தும், உடல் அன்பினால் புளகம் போர்த்தும், சொல்லினோர்க்கெல்லாம் எதிரெதிர் நீள்நிதி தூர்த்தும் பேரானந்தமுற்ற நிலையை நோக்கிய கம்பர், அன்று பிறந்துள மகவுதான் "தீர்த்தன் என்று அறிந்ததோ அவர்தம் சிந்தையே" என வியப்பவராயினர். அம்மகவுமோர் இளமைந்தனாய் வளர்ந்து மிதிலைக்கு "வில்லுங்காண" வந்திருக்கின்ற செவ்வியில் இந்நகரமாந்தர், "இச்சிலை தீண்டுதற்கொத்தார் அயலொருவர் இலராகையால், அச்சங்கு சக்கரச் செங்கையான் ஒருவன் இன்று நாணேற்றின் மங்கை திருமணம் வாழும்" என்று இயம்புவதும், "அந்த நேமியான்தான் நிச்சயமாய் எடுப்பானோ?" என்று வியப்பவதும் ஆயினர். தீண்டுதற் கல்லால் தெறிப்பதற்கு மியன்றவத் திருமாலே அந்நாள் அப்போது மன்னவை பொலிய வீற்றிருந்தனன். அவன் எடுப்பதும் நிச்சயம். இம்மிதிலைவாழ் பெருமக்கள்தம்முடைய சிந்தையும் இங்குத் தீர்த்தனென் றுணர்ந்ததாலோ, உண்மையே அவர் வாயில் வரலாயிற்று! இவ்வாறு இவர்கள் இயம்பிய நயத்தினை ஆங்கிலத்தில் "ட்ரமாடிக் ஐரனி" (Dramatic Irony) என வழங்கும் அணியின்பாற் படுத்துவர். அவ்வணிநயம் மாத்திரமன்றி, நாம் விஷயங்களை அறிவதற்குக் கருவியாய் மனம் இருப்பதுபோலவே, மனம் தனக்குள் அறிந்து கொள்வதற்கு ஓர்தெய்விக உணர்வு இருக்கின்றதென்னும் தத்துவமும் இதனின்று பெறுதல் நலம். "தீர்த்தனென்று அறிந்தனரோ அவர்" என்னாது "தீர்த்தனென்று அறிந்ததோ அவர்தம் சிந்தையே" என்ற வாசகத்தின் மெய்ப்பொருள் அது.

தத்துவச்செய்தி இதுவாக, மானுட மனத்தின் சூழ்ச்சிகள் பலதிறப்பட்டுத் தோன்றலாவதை இம்மிதிலை மாந்தர்தம் மொழிகள் நன்கு காட்டுகின்றன. விருப்புவெறுப்பின்றி வில்லின் வன்மையைமாத்திரம் மதித்துக் கூறினோன் ஒருவனுக்கு அவ்வில் திசைமுகன்தன் மொய்தவப் பெருமையாய்த் தோன்றிற்று. மற்றுச் சீதையின்பால் மிக்க பரிவினால் அவள் சார்புநின்ற வேறொருவனே மீண்டுமவ் வில்லையே பிரம்மன் செய்த தீமையாய்க் கருதலாயினான். நன்மையுந் தீமையும் பொருள்களின்பா லில்லை. அவைகளைக் கருதுவோர் மனநிலைக்கேற்றவாறு அவை அவ்வப்போது மாறிமாறித் தோன்றலாகின்றன. வேண்டுதல் வேண்டாமைகளால் அலைப்புண்ணுந் தனிமனத்தின் தன்மை இன்னதெனின் பொதுஜனமனதோ, ஒன்றோடொன்று தொடர்கின்ற காரணத்தால் வரவர உரம்பெற்றுத் துரும்பைத் தூணுக்கித் தூணை மலையாக்கி மோசம்போம் தன்மைத்து. முன்னைச் சரித்திரத்தைப் பெருமைக்குப் பேசுவாரானாலும், முற்றிலும் அதனை மறந்தவர்களாகவே விவகரிப்பர். இவ்விருவகைக் குணங்கள் வாய்ந்தவராதலால் இப்பொது ஜனங்கள் ஒருவனைப் போற்றுவதும் தூற்றுவதும் உண்மைக்கிணங்கி யிருக்கின்றனவென வெண்ணுதல் ஒண்ணுததாகின்றது. ஜனகன் தத்துவ உணர்வினால் இணையற்றுத் திகழ்கின்ற மன்னன். அரசனாயிருப்பினும் இருடியே யாயினன். முன்னாளிவன் இளமையிலேயே யாக்ஞவல்கியரிடம் மறைபறிவு பயின்றிருந்தகாலத்தி லவ்வாசிரியர் மிதிலைநகர் தீப்பற்றியெரியும் ஒருதோற்றம் மாயத்தால் விளைவித்து ஜனகன் காணுமாறு செய்தபோது அம்மன்னன் மனமென்பது சிறிதும் சலிக்காது, "குருவர, நீர் கூறிவரும் அருமையான விஷயத்தை இடையில் நிறுத்தாமல் ஓதுக" என வேண்டினன். சுகப்பிரம்மமே இச்சனகன்பால் நான்மறையின் உட்பொருளைக் கற்றுணர்வான் எய்தினரென்றால் வேறொன் றுரைத்தல் வேண்டுமோ! இத்தகைய ஜனகன்தன் மெய்புணர்வும் நற்புகழும் அந்நகரவாசிகள் அறிந்திராதவைகளல்ல. தம்மன்னனது சரித்திரமும் தன்மையும் அவன்மனத் தூய்மையும் அந்நகரமாக்கள் தனித்தனி நன்குணர்ந்தவர். தனிமையில் ஒருவன் சிந்திக்கின்றபோது எய்துகின்ற தெளிவு பலரொடு குழுமிப் பேசுகின்றபோது ஏற்படுகின்றதில்லை. தனியாக. அமர்ந்து தன் மனமே சான்றாக ஒருவிடயத்தைப்பற்றி எண்ணுங்காலையில், அபிமானத்தின் காரணமாய் உண்மைக்கு மாறான வொரு முடிவின்பால் சாய்வானாலும், உடனே தான் வந்த முடிவிற்குத் தானேயஞ்சி விரைவினில் திருத்தித் தெளிந்துகொள்வான். நடுநிலையினின்று வழுவி ஓரோரஞ் சோர்வதற்குக் காரணமாயிருப்பது ஆசையே. ஜனங்கள் ஒன்றுகூடி விவகரிக்குங்காலையில் ஆசையால் அயர்ந்த வொருவன் மறுபடி தன்னிலைக்குத் திருத்திக்கொள்ள நேரம் இருப்பதில்லை. அயிர்த்ததை அஞ்சியஞ்சிச் சிறிது கழறிவிடுகின்றான். இத்தகைய ஐயமும் அயர்வும் எய்தியவன், அக்குழுவிற்குள் இன்னொருவன் இருக்கலாம். உடனே அவன் முன்னவன் கழறிய மொழி கேட்டு, "என்போன்று எண்ணுவான் இன்னொருவன் உளன். ஆதலின் எனது ஐயத்திற்கும் ஆதாரம் உளது போலும்" என உள்ளந் தேறுகின்றானாதலால் அவனுக்கும் தன்னுடைய நல்லுணர்வைக்கொண்டு தனது சிந்தனையை நேர்மை செய்துகொள்ள அமயம் தாழ்வதில்லை. ஒருவன் உரைத்த வார்த்தையானது, மற்றவனுடைய மனத்தின்கண்போய்ப் பதிவதன்முன் வாய்நின்று வார்த்தையே தூண்டுதல் இயல்பு. எனின், முன்னவன் மொழிந்த மாற்றத்திற்கிணங்கி இவனும் அதனினும் சிறிது வன்மையோ டொன்றினை இயம்ப நேர்கின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் விருப்பு வெறுப்பென்பன மனத்தைபற்றி அலைப்பதால் அம் மனச்சான்றிற்கு இடந்தராமல், ஒருவர் பேதைமையை மற்றவர், தம் பேதைமைக்குச் சான்றாகக் கொள்ளப் புகுகின்றனர். மூன்றாமொருவன் இவைகளால் துணிவுமிக்கு வன்மையுடன் தானும் சிலமொழிகள் தயங்காமல் சொல்வான். இவ்விதந்தனில், நால்வர் கொண்ட ஐயம் ஒன்றுகூடினால் நிச்சயம் என்னும் போலிநிலை எய்தலாகின்றது. மிதிலா நகரமாந்தர் தனித்தனிப் பகுத்தறிவு அற்றவர்களல்லர். ஆனால் பொதுக்கூட்டங்களில் பகுத்தறிவைக் கையாள நியதியேனும் நேரமேனும் இருப்பது அருமை.

பொதுஜனமாய் விவகரிக்கின்றபோது மனிதர்தம் மனத்தின்தன்மை இவ்வா றமைகின்ற உண்மை பிறழாமல், கார்முகத்தை மொய்த்துவந்த அம்மிதிலா நகரத்தவ ரிடையேயும் பொய்யுரைகள் சில பரவலாகின்றன. ஒரு சிலர், "என்னிது கொணர்கென இயம்பினன்" என்று தெளியாது ஒன்றுசெப்ப வேறு சிலர், "கேட்பானேன். மன்னவருளர்கொலோ மதி கெட்டார்" என மிதிலையின் தலைவனை மதியிலியென்று கூசாது கூறினர். அவ்வளவோடு நின்றிருந்தாற்போதுமே. இவ்வுரைகளால் நெஞ்சு துணிந்த மற்றுஞ்சிலர், தூயவிவ் வேந்தனுக்குத் தீயநோக்கமுங் கற்பித்துத் "தன்னுடைய நேரான மகளாயிருந்தால் வில்லை இடைவைத்துச் சீதைதான் குமரிமூத்துச் சாகக் காண்பானோ! மண்ணிற்கிடந்தெடுத்த பெண்ணுதலால், ஆசையென்பது அவனுக்கு அவள்பாற் சிறிதுமில்லை. அவளுக்கு விவாக மாகப்படாதென்பதே இவன் கருத்து. அப்படி எவனேனும் இவ்வில்லை வளைத்துவிடுவானாயின், இச்சனகன் தனதெண்ணம் சிதைந்ததென்ற கோபத்தால் சீதையைக் கொன்றும் விடுவான்" என்னும் கொடுமைகூர் நினைவுகளடங்க, "நச்சிலை நங்கைமேல் இச்சிலை உதைத்தகோலை இலக்குவைத்து வேந்தன் நாட்டும்" எனப் பேசவும் வாய்பெற்றனர். ஒன்றிற்கும் துளங்காத மனதுடைய ஜனகன், "இம்மாயவிற்குத் தோற்றவாறென மனந்துளங்கினான்" என்றால், அவன் சீதையின்பால் வைத்ததோர் பேரன்பு அளத்தற்காகுமோ. அன்னவற்கு உற்றபழியு மிதுவென்றால் யாரே ஊர்வாய்க்கிங் கிரையாகார்! ஜனங்களும் பழிக்கவேண்டுமென்ற தீயகுணத்தால் பழித்தவரு மல்லர். தங் கோமகளிடத்து வைத்த பரிவுபற்றி இப்பேதைகள் நா, எல்லைக்கல்லில் இடறி அப்பால் விழுந்த செய்தி இது. இவர்கள் ஒன்று சேர்ந்து பேசியிராராயின் இவ்விழுக்கும் நேர்ந்திராது. இப்பேச்சைத்தான் உலகவழக்கில் வம்பு என்பர். கம்பரை வம்பரென்பதுந் தக்கதாயிற்று.

தமிழ்ப் பாடம் 69.

[நளவெண்பா.]

கலி நீங்கு காண்டம்.

தன்மக்கள் மொழிந்தமொழி கேட்ட நளன் அவர் அடைந்துள நிலைமைக்கு வருந்தினானேனும், அவர்கள் செம்மையாய்ப் பேசும் திறத்தைத் கண்டு மகிழ்வும் எய்தினான். எய்தி மேலும் சில வார்த்தைகள் அவர்களோடு பேச விரும்பினான் விரும்பியவன் விளையாட்டாகச் சொன்னசொற்கள் அம்மக்களுக்குக் கோபம் மூட்டியதையும், அக்கோபத்தை நளன் தணித்ததையும் கீழ்வரும் நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

உங்க ளரசொருவ னாளநீ ரோடிப்போந்
திங்க ணுறைத லிழுக்கன்றோ—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. 61.

பதப்பிரிவு:—உங்கள் அரசு ஒருவன் ஆள நீர் ஓடி போந்து இங்கண் உறைதல் இழுக்கு அன்றோ செம் கை வள அரசே என்று உரைத்தான் மா தவத்தால் பெற்ற இள அரசை நோக்கி எடுத்து.

அன்வயம்:—மாதவத்தால் பெற்ற இளவரசை நோக்கி, "செம்கை வள அரசே, உங்கள் அரசு ஒருவன் ஆள நீர் ஓடிப்போந்து இங்கண் உறைதல் இழுக்கு அன்றோ" என்று எடுத்து உரைத்தான்.

பதவுரை.

மா - பெரிய
தவத்தால் - தவத்தின் பயனாக
பெற்ற - பெற்ற
இளவரசை - இளவரசனாகிய இந்திரசேனனை
நோக்கி - பார்த்து,
" செம் - சிவந்த
கை - கைகளின்
வளம் - வளம்பொருந்திய
அரசே - அரசனே,
உங்கள் - உங்களுடைய
அரசு - இராச்சியத்தை
ஒருவன் - வேறொருவன்
ஆள - ஆளும்படிவிட்டு
நீர் - நீங்கள்
ஓடிப்போந்து - ஓடிவந்து
இங்கண் - இவ்விடத்தில்
உறைதல் - வசிப்பது
இழுக்கு அன்றோ - அவமான மாகாதோ!"
என்று - என்று (நளன்)
எடுத்து - எடுத்து
உரைத்தான் - சொன்னான்.

விரிவுரை:—பேசுந் திறமையுடைய சிறுமக்களைக் கண்டால் யாவரும் அவர்களது வாயைக் 'கிளறுவது' வழக்கம். ஆனால் அது ஒவ்வொரு சமயம் சொன்னவர்க்கே ஆபத்தாய் முடிவதுமுண்டு. நளனுக்கு இங்கே அது அப்படி ஆயிற்று. இதைக்கேட்ட இந்திரசேனனுக்கும் இந்திரசேனைக்கும் "தேர்ப்பாகன் இவன் கோமக்கள் நம்மைப் பார்த்து இப்படியும் உரைப்பதுவோ" என்று வெஞ்சினம் மூளமூளப் பின் வருமாறு எதிர் விளம்பினர்.

நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 62.

பதப்பிரிவு:—நெஞ்சால் இ மாற்றம் நினைந்து உரைக்க நீ அல்லாது அஞ்சாரோ மன்னர் அடு மடையா எஞ்சாது தீமையே கொண்ட சிறு தொழிலாய் எம் கோமான் வாய்மையே கண்டாய் வலி.

பதவுரை.

"அடு - சமைக்கின்ற
மடையா - சமையற்காரனே,
இ - இப்படிப்பட்ட
மாற்றம் - வார்த்தையை
நெஞ்சால் - மனத்தினால்
நினைந்து - நினைத்து
உரைக்க - சொல்ல,
நீ - நீ
அல்லாது - கிடக்க,
மன்னர் - அரசர்களும்
அஞ்சாரோ - பயப்படமாட்டாரோ", (என்று இந்திரசேனை வெகுள, இந்திரசேனன்)
" தீமையே - தாழ்மையையே
எஞ்சாது - அவமானமில்லாமல்
கொண்ட - கொண்டிருக்கின்ற
சிறு - அற்பமாகிய
தொழிலாய் - தொழில்செய்வோனே,
எம் - எங்களுடைய

கோமான் - அரசனுக்கு
வலி - பலம் என்பது
வாய்மையே - சத்தியமேயாகும் என்பதை
கண்டாய் - அறியாயோ'' (எனக் கூறினன்)

விரிவுரை:—நளன் இளவரசைநோக்கிச் சொன்ன போதிலும் அதற்குப்பதில் இருமங்களும் சொன்ன தாகக் கொள்வது நலம். தம் மானங்கெடப் பேசினன் என்றசீற்றம் மிகஎழுந்த மகள் இந்திரசேனை பதை பதைத்து, "ஏ, சமையல்தொழில் செய்கின்ற கீழ் மகனே, எப்படியடா நினைத்து நீ இந்த வாசகம் இயம்பினய்! நீகிடக்க எங்களுக்குச் சமநிலையி லிருக்கின்ற அரசர்களுங்கூட எம்முடைய கதியைப் பழித்து இவ்வாறு நிந்திக்க அஞ்சுவார்களே'' என இடித்துரைக்கவும், அவ்வுரையைத் தொடர்ந்து இந் திரசேனன், "ஆனல், உன்போன்ற அற்பத் தொழி லாளிகள் அரசருடைய தன்மையை, எவ்வாறு அறி குவர். எங்களரசை ஒருவனுள்வது நளன் வலி யின்றிப் போர்தோற்று நாட்டை இழந்ததால் நேர்ந்த தன்று. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டதால் இப்படி ஆயிற்று. அதைப்போய் உனக்குக் கூறி ஏது பயன்! பாகனுகிய நீயோ இன்னவைகளை உணரமாட் டாய்'' என முடித்தனன். முடித்து நளனுடைய ஆற்றலேயும் அவன் தனிக்கோல் செலுத்திய திறத் தையும் அடுத்த செய்யுளில் எடுத்துக்காட்டுகின்றுன்.

எந்தை கழலிணையி லெம்மருங்குங் காணலாங்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தாழும்
மணிமுடியிற் றேய்ந்த வடு.

பதப்பிரிவு:—எந்தை கழல் இணையில் எ மருங்கும் காணல்ஆம் கந்து சுளியும் கடா களிற்றின் வந்து பணி முடியில் பார் காக்கும் பார் வேந்தர் தாழும் மணி முடியில் தேய்ந்த வடு.

அன்வயம்:—பணிமுடியில் பார்காக்கும் பார்வேந் தர், கந்து சுளியும் கடாக் களிற்றின் வந்து, தாழும் மணிமுடியில் தேய்ந்த வடு, எந்தை கழல் இணையில் எம்மருங்கும் காணலாம்.

பதவுரை.

"பணி - ஆதிசேஷன் என்னும் பாம்பினது
முடியில் - தலையிலுள்ள
பார் - பூமியை
காக்கும் - காக்கின்ற
பார் - பெரிய
வேந்தர் - அரசர்கள், (தங்களுடைய கப்பங்களைச் செலுத்துவதற்கு)
கந்து - (கட்டுகின்ற) தூணை
சுளியும் - கோபித்து முறிக்கின்ற
கடாக்களிற்றின் - ஆண்யானைகளின்மேல்
வந்து - வந்து
தாழும் - வணங்குகின்ற
மணி - இரத்தினம் இழைத்த
முடியால் - (அவர்களது) கிரீடங்களால்
தேய்ந்த - தேய்ந்து தேய்ந்து உண்டான
வடு - தழும்புகளை
எந்தை - எம் தந்தையினுடைய
கழல் இணையில் - இரண்டு பாதங்களிலும்
எ - எல்லா
மருங்கும் - பக்கத்திலும்
காணலாம் - பார்க்கலாம்'' (என்று இந்திரசேனன் செப்பினன்).

விரிவுரை:—பெருமிதச் சொற்கள் மிகநன்று பேசவல்லான் இவ்விளவரசன், சூளாமணியில் கூறி யிருக்கின்றபடி, "அடிநிழல் அரசரை அளிக்கும் ஆய் கதிர்'' முடியுடை வேந்தன் நளன் என்பதை அவ்வாகு கப்பாகனுக்குத் தெரிவிக்கின்றுன். தன்னுடைய வாய் மையையும் ஆற்றலேயும் இன்னவாறு தன்மக்கள் புக ழக்கேட்ட நளனது மனம் எத்துணைமகிழ்வு அடைந் திருக்கு மென்பதை அளந்தியம்ப யாவரால் இயலும். இவ்வுலகில் ஒருவன் அடைந்த இன்பத்திற்குச் சம மான துன்பமும், துன்பத்திற்குச் சமமான இன்ப மும் எய்தியே தீரும் என்பார். இவ்வளவுகாலம் தான் உற்ற துயரிற்கெல்லாம் இணையான இன்பம் இதுவே யென நளன் மதித்திருப்பான். இருப்பினும் இம்மக் கள் வாயை இனித்தூண்டப்படா தென்பது முணர்ந் தான்.

மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றுன்
கனிந்துருகி நீர்வாரக் கண். 64.

பதப்பிரிவு:—மன்னர் பெருமை மடையர் அறி வரோ உன்னை அறியாது உரைசெய்த என்னை முனிந்து அருளல் என்று முடி சாய்த்து நின்றுன் கனிந்து உருகி நீர் வார கண்.

அன்வயம்:—கனிந்து உருகிக் கண்நீர் வார, "மன் னர் பெருமை மடையர் அறிவரோ! உன்னை அறியாது உரைசெய்த என்னை முனிந்து அருளல்'' என்று முடி சாய்த்து நின்றுன்.

பதவுரை.

கனிந்து - (மக்கள் உரையைக்கேட்ட நளனது மனம்) கனிந்து
உருகி - உருகி
கண் - கண்களிலிருந்து
நீர் - நீர்
வார - பெருக,
"மன்னர் - மன்னர்களது
பெருமை - பெருமையை
மடையர் - (என்போன்ற) சமையற்காரர்கள்
அறிவரோ - அறிவார்களோ! (ஆதலால்)
உன்னை - உன்னை
அறியாது - தெரிந்துகொள்ளாமல்
உரைசெய்த - பேசிய
என்னை - (எளியோனுகிய) என்னை
முனிந்து அருளல் - அருள்புரிந்து கோபிக்காதே''
என்று - என்றுசொல்லி
முடி - தன் தலையை
சாய்த்து - வணங்கி
நின்றுன் - நிற்கலாயினன்.

விரிவுரை:—"மன்னர் பெருமை மடையர் அறி வரோ'' என்பது நளன் வாயில் வஞ்சனையாய் வந்து மிகவும் நயமாக நிற்கின்றது. "உன்னை அறியாது உரைசெய்த என்னை முனிந்தருளல்'' என்பதும் அன் னதே. "இவ்வளவு வலிய வாய் உடையவன் நீ என் பது உணராமல் ஏதோ விளையாட்டாகச் சொல்லி விட்டேன். அதற்குத் தக்க பலனும் கிடைத்தது'' என்ற உட்கருத்தோடு, "உன்னுடைய பெருமை தெரியாமற் பேசிய என்போன்ற சிறுதொழிலாள னைப் பொறுத்தருள்'' என்ற வெளிப்பொருளும் அடங்கிய வாசகம் அது.

Our Publications.

Kamban's Kosala.

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவர் மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவ ரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ 1-4-0 மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப் புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத் துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத் தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாட கைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொட ர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப் பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப் பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந் தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப் பிக் கேட்கவும் **மானேஜர்,**
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷா சலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறுது, பதம் பிரித்தும், தொகை விரித்தும், அன்வயப்படுத்தி யும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க் கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக் கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன் பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனெருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெரு மையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலு சாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண் டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற் கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்ய வல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A.,B.L. ஆங்கிலத் தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப் பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு. **கலா நிலயம்,**
வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

உபயோகமுள்ள வெள்ளிக் கலன்களால் உங்கள் மனைகளை அலங்காரஞ் செய்யுங்கள்.

வெள்ளி நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் வெள்ளி நாணயங்களும் மாந்தர்தம் நல்வாழ்வின் வளர்ச்சியுடன் எக்காலத்திலும் சேர்ந்து வருகின்றன.

சுராஜ்மல் வெள்ளிக் கலன்கள் வெள்ளி வேலைக் கலையின் முதிர்ச்சியைக் காட்டி நிற்றலால் அவை நன்கொடை அளித்தற்கு உரியன. உலோகத்தின் மேன்மையும், வேலைப் பாட்டின் பெருமையும் அமைந்திருக்கும் சுராஜ்மல்லின் வெள்ளி எங்கும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்விடத்திற்கும் ஏற்றதா யிருக்கின்றது. நல்ல வெள்ளிச் சாமான்களை வைத்திருப்பதுபோல் திருப்தியுடையது வேறில்லை. நன்கொடைக்குஏற்றது

எங்களுடைய வெள்ளிக் கலன்களெல்லாம் சுத்தமான உலோகத்தால் செய்தவை. அவைகளின்மீது எங்கள் டையமண்ட் டிரேட் மார்க் இருக்கும். தேர்ச்சிபெற்ற வேலைக்காரர்களின் கைவேலை அவை. ஒவ்வொன்றும் அழகின் அதிசயம். தனக்குநிகர் தானே என்னும் படி அமைந்திருக்கின்றது.

கணக்கற்ற சாமான்களைச் செய்து தயாராக வைத்திருக்கிறோம். ஆதலால் வீட்டின் உபயோகத்திற்கேனும் வெகுமதி கொடுப்பதற்கேனும் உங்களுக்கு வேண்டியதை எளிதில் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடும்.

வேண்டுவோர்க்கு மாதிரிகளும் விலைகளும் அனுப்புவோம்.

ஸுராஜ்மல் லல்லுபாய் & கோ.,

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. 359, கலபாதேவி ரோட், பம்பாய். **134**, மோகல் தெரு, ரங்கூன். 12, லால்பஜார் கல்கத்தா. **313**, எஸ்பளனேட் சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. 359, Kalladvi Road BOMBAY. 134, Mogul Street, RANGOON. 12, Lal Bazaar CALCUTTA. 313, Esplanade MADRAS.

வர்த்தமானம்

வாடகைக்கு இப்பொழுது டாக்ஸி என்னும் மோடார் வண்டிகள் ஓடுவதுபோல் ஆகாய விமானங்களும் இங்கிலாந்தில் கூடியசீக்கிரத்தில் ஏற்படப் போகின்றன.

***

திரான்ஸ்வாலில் இந்தியர்கள் தெருவீதிகளில் சரக்குகளைக் கூறி விற்பதைத் தடுக்கும்படி ஏற்ற சட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்று பிரயத்தனப் படுகிறார்கள். இவ்விதமான சட்டம் ஏற்பட்டால் அனேகர் சீவியத்திற்கு வரும்படியில்லாமல் கஷ்டப்பட நேரிடும்.

***

மத்தியமாகாண அரசாங்கத்தார், K. K. மெகிரொத் ராம் என்னும் அலகபாத் சர்வகலாசாலை ஆசிரியரை, ஆங்கிலக் கதாநூல்களில் காதல் எவ்விதம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற தென்பதை ஆராய்சி செய்வதற்காகப் பணஉதவி செய்து இங்கிலாந்துக்கு அனுப்பி யிருக்கிறார்கள்.

***

நாடு துறந்து காட்டில் வசிக்கின்ற நாபா மகாராஜா, தான் இறந்தபின் தன்னுடைய உடலை நாபாவிற்குக் கொண்டுபோகாது, காவேரியாற்றங் கரையிலேயே அதனைத் தகனஞ் செய்யவேண்டுமென்று சர்தார் சார்துல் சிங்கிற்குத் தெரிவித்து எழுதியிருக்கின்றார்

***

சீனாவில் கோடியபஞ்சம்:—சீனாவில் கான்சு என்றவிடத்தில் மிகக் கொடுமையான பஞ்சம் உண்டாயிருக்கிறது. கான்சுவின் தலைநகரான லான்சென் என்ற நகரில் ஒருநாளைக்கு 300 பேர் வரையில் இறந்துவிடுகிறார்கள். இவைகளைப் புதைப்பதற்கும் சனங்களால் முடியவில்லை பசிக் கொடுமையால் குழந்தைகளையும் சாப்பிட்டு விடுகிறார்களாம்.

***

டற்சு கிழக்கிந்திய தீவுகளின் புது அரசாங்கச் சட்டத்தின்படி, புதிதாய் ஏற்படவிருக்கும் பொது ஜன சங்கத்தில் சுதேசிகளும் ஐரோப்பியருக்கும் மற்றும் அன்னிய கிழக்குத்தேச வாசிகளுக்கும் சங்கத்தில் இருப்பதற்குச் சமஉரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

***

P. O. கம்பனியாருடைய மிகப் பெரிய கப்பல்:—வைஸ்ராய் ஆப் இந்தியா என்னும் கப்பல் வெள்ளிக்கிழமை பம்பாய் வந்து சேர்ந்தது. P. O. கம்பனியாருடைய கப்பல்களுள் மிகப் பெரியது இது. 812 அடி நீளமும் 82 அடி அகலமும், 78 அடி ஆழமும் உள்ளது. இதில் 415 முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கு இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் அனேக வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன

***

சென்ற ஆறுவருஷங்களாக இங்கிலாந்தில் ஜனன விகிதம் வருஷத்திற்கு வருஷம் குறைந்துகொண்டே வருகின்றது. ஒருதேசத்தின் மொத்த ஜனத்தொகையில் வருஷா வருஷம் ஆயிரத்திற்கு,நூற்றுத் தொண்ணூற்றைந்து வீதம் குழந்தைகள் பிறந்துகொண்டேயிருந்தால்தான் அத்தேசத்தின் ஜனத்தொகை குறைவடையாமல் ஒரேநிலையில் இருந்து வருமென்றும், சென்ற சிலஆண்டுகளாக இங்கிலாந்தில் ஜனன விகிதம் இதைவிட மிகக்குறைந் திருக்கின்றதென்றும், இந்தப்படியே இன்னும் சிலவருடங்கள் இருக்குமானால் அந்நாட்டின் ஜனத்தொகை மிகவும் குறைந்துவிடுமென்றும் இங்கிலாந்து ஜனனமரண ரிஜிஸ்ட்ரார் ஜனரல் தெரிவிக்கின்றார்.

அமெரிக்கா யுனைடெட்ஸ்டேட்ஸைப்போல் சாராயமென்பதைச் சட்டத்தால் அந்நாட்டினின்று அறவே விலக்கிவிடவில்லையாயினும், அயர்லாந்து தேசமும் சாராயக் கடைகளைப் பெரும்பான்மை குறைத்துவிடுவதற்கு வேண்டிய சட்டதிட்டங்களைச்செய்திருக்கின்றது. இச்சட்டத்தின் காரியமாய் நூற்றுக்கணக்கான கடைகள் மூடப்பட்டு விட்டன.

***

இந்த ஏப்ரல் மாதம் 27உ ஸைமன் கமிஷனர்கள் லண்டனிற்குப் போய்ச் சேர்வார்கள். அச்சமயம் அவர்களுக்குப் பற்பலர் நல்வரவுகூறி அவர்களைப் பாராட்டுவார். ஆனால் லண்டனிலிருக்கும் காங்கிரஸ் கட்சியினர், தாம் இச்சைமன் கமிஷனர்களைப் பகிஷ்காரம் செய்கின்றனர் என்பதைக் காட்டிவைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது.

***

கோவில்களையும் ஹிந்துத்தலைவர்களையும் அழித்துவிடுவதாகப் பயமுறுத்தி அனுப்பப்பட்டவொரு அனாமதேயக் கடிதத்தைப் பிரசுரித்ததற்காக, 'தேசபந்துவின்' ஆசிரியர் ஸ்ரீமான் கே. வி. காந்தியைச் சூரத்து மாஜிஸ்ட்ரேட் தண்டித்து ஒன்பது மாதக் கடுங்காவல் விதித்தார். அனாமதேயக் கடிதத்தைக்கண்டு பயந்தாரானால் அதை அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதே கடமையென்றும், பத்திரிகையில் போட்டிருக்கப்படாதென்றும் அந்தத் தீர்ப்புக் கூறுகின்றது.

***

டாக்டர் பேசண்ட்:—லண்டனுக்குப் பிரயாணப்பட்டுச் சென்ற வெள்ளிக்கிழமை பம்பாயில் தங்கி அவ்விடம் செய்த பிரசங்கத்தில் தான் இங்கிலாந்தில் நேரு அறிக்கையையே அரசாங்க சீர்திருத்தத்திற்கு ஏற்ற சட்டமாக்க வேண்டியதற்குச் செய்யவேண்டிய முயற்சி எல்லாம் செய்யப்போவதாய்க் கூறினார்.

ஒருபத்திரிகை நிருபர் அவரைச் சந்தித்துப்பேசினபொழுது தான் இங்கிலாந்தில் சீக்கிரத்தில் நடக்கவிருக்கும் பார்லிமெண்டு தேர்தலில் தொழிலாளர் கட்சிக்காக வேலைசெய்ய விருப்பதாயும் தொழிலாளர் கட்சியே வெற்றி அடையக்கூடும் என்று சொன்னார்.

***

இந்திய ஆகாய விமான மாலுமி:—இருபத்திரண்டு வயதுள்ள P. M. கபாலி என்னும் இந்திய வாலிபன் பிரித்தானிய ஆகாயவிமான மாலுமியாக லைசன்ஸ் பெற்றிருக்கிறார். இவர்தான் இந்த லைசன்ஸ் முதல் முதல் பெற்ற இந்தியன். இவர் தன்சொந்தச் செலவிலேயே மேலைத்தேசங்களில் ஆகாய விமானம் செலுத்துவதற்குப் பழகுவதற்காகச் சென்றிருந்தார். பின் ஈஸ்டேறன் ஏயர்வேயிஸ் லிமிட்டெட் என்னும் கம்பினி அவர் தொழில் பழகுவதற்காக வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் பண்ணியிருந்தார்கள். இவர் இந்திய கம்பனி ஒன்றில் சேர்வதாகவிருக்கிறார்.

***

தன்னுடைய மதாபிமானத்திற்கு உயிரையே அற்பணஞ் செய்த இராஜபாலின் தேகத்தை 25,000 உத்தம பக்தர்கள் சூழ்ந்துவரக் கொண்டுபோய் இடுகாட்டிலிட்டுத் தகனஞ் செய்தார். அச்சமயம் அவர் மனைவியார், தன்னுடைய மகனும் கணவனைப் போன்றே, மதத்தின்பொருட்டு உயிரைத் தியாகஞ் செய்யவேண்டு மென்று விரும்புவதாகத் தெரிவித்தனராம். இந்துமதப் பிரசாரங்கள் செய்யும் பொருட்டும், இராஜபாலைப்போல் அத்தகைய காரியங்களில் உயிர் துறந்தவர்களின் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கும், ரூ 30000 சேகரிக்க வேண்டுமென்று பஞ்சாப் ஆரிய பிரதிநிதிசபை தீர்மானஞ் செய்திருக்கின்றது.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இதன் விலை ரூ. 2-0-0

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஆரியன் புக் டிபோ, நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

"ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது. மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.
(வெளி நாடுகட்கு 6 மாத சந்தா இல்லை)

189052 **ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11. VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E Kumariah, B.A., B.L. (Editor)